பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 21 சனிக்கிழமை (03.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 159

## கிழக்கு மாகாண சபைக்கான

# தேர்தலில் மோசடி இடம்பெறின்

# இன நெருக்கடி தீவிரமடையும்!

## சுயாதீன தேர்தல் கண்காணிப்புக் குழு எச்சரிக்கிறது

கொழும்பு, மே 03

அடுத்த வார இறுதியில் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தல், சுதந்திர மாகவும் நீதியாகவும் நடைபெறாவிட்டால், அது இனப்பிரச்சினையை மேலும் தீவிரமடையச் செய்யும் அபாயம் உண்டு.

வாக்காளர்கள் அச்சமற்ற சூழ்நிலையில் தமது உயிர்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லாது, வன்முறையற்ற முறையில் வாக்களிப்பதற்கு உகந்தநிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளது "லங்கா போல் வாட்ச்" (Lanka Poll Watch) என்று சுயாதீனக் கண்காணிப்புக் குழு.

'லங்கா போல் வாட்ச்' அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

நவீன ஜனநாயகத்தில் மக்களின் இறைமையை செயற்படுத்துகின்ற அடிப் படை அம்சங்களாகத் தேர்தலும், பொதுமக் களின் வாக்களிக்கும் உரிமையும் காணப் படுகின்றன.

இலங்கையில் இந்தக் கொள்கைகள் காணப்படுகின்றன என்பதில் எவ்வித சந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு நாடுகளைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்புக் குழு

### நாளை இலங்கை வருகிறது

கொழும்பு, மே 03

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெற வுள்ள கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற் கென விசேட வெளிநாட்டுக் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்தைச் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பு அதிகாரிகளே இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பிள்ளையான் குழுவிடம் ஆயுதமும் இல்லை; ஒரு விறகு கட்டையும் கூடக் கிடையாது!

## அரசாங்கத் தரப்பில் அமைச்சர்கள் சொல்கிறார்கள்

கொழும்பு, மே 03

கிழக்கில் போட்டியிடும் பிள்ளையான் குழுவினர் ஆயுதங்கள் வைத்திருப்பதாகக் கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை.

அவர்களிடம் ஆயுதங்களும் இல்லை. ஒரு விறகுக்கட்டை தானும் இல்லை.

அக்குழுவினரிடம் துப்பாக்கிகள் இருந் திருப்பின் அவர்களின் குழுவைச் சேர்ந்த இரண்டு பேர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்.

இவ்வாறு அரசாங்கத்தின் சார்பில் இரண்டு அமைச்சர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

நேற்று தகவல் திணைக்களத்தில் ஊடகத்துறை அமைச்சர் அனுரபிரியதர் சன யாப்பாவும், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் கிழக்குத் தேர்தல் நிலைமை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் மேற் கண்டவாறு கூறினார்கள்.

அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா கூறியவை வருமாறு:-

கிழக்குத் தேர்தலில் போட்டியிடும் பிள்ளையான் குழு ஆயுதங்களுடன் தேர் தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றது என்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின் றன.

பிள்ளையான் குழுவைச் சேர்ந்த இரண்டு பேர் இதுவரை கிழக்கில் சுட்டுக் கொல் லப்பட்டுள்ளனர். பிள்ளையான் குழுவி டம் ஆயுதம் இருந்திருந்தால் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கமாட்டார்கள்.

பிள்ளையான் குழுவினர் எந்தவிதமான தேர்தல் வன்முறைகளிலும் ஈடுபட வில்லை. அவர்கள் அமைதியான முறையி லேயே தேர்தல் நடவடிக்கையில் ஈடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவன் உட்பட இருவர் நேற்று சரண்

யாழ்ப்பாணம், மே3

உயிர் அச்சுறுத்தல் காரணமாக 19 வயது மாணவன் உட்பட இருவர் மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத் தில் நேற்றுச் சரண் அடைந்தனர்.

கொக்குவில், பிறவுண் வீதியைச் சேர்ந்த 19 வயது மாணவனும், இராமாவில், கொடிகாமத்தைச் சேர்ந்த 25 வயதுடைய இளம் குடும்பஸ்தரான வர்த்தகருமே சரண் அடைந்தவர்களாவர்.

இவர்களை பாதுகாப்பாக தங்கவைக்க ஆணைக் குழுவினர் ஏற்பாடுகளை செய் துள்ளனர். (1)

# மன்னார் கறுக்காய்க் குளம் பகுதியில் படையினர் - புலிகள் கடும் மோதல்

## ஒன்றரை கிலோமீற்றர் தன்வசம் என்கிறது இராணுவம்

கொழும்பு, மே 03

மன்னார், கறுக்காய்க்குளம் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணு வத்தினருக்கும் இடையில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற கடுஞ்சமரில் இராணு வத்தினர் பத்துப் பேர் உயிரிழந்தனர்; 20 பேர் படுகாயமடைந்தனர் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

திருக்கேதீஸ்வரம் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் டாங்கி மற்றும் பிற்புலச் சூட்டாதரவுடன் விடுத லைப் புலிகளின் நிலைகளை நோக்கி முன் னேற முயன்றனர் என்றும், அதன்போது

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலத்திரனியல் ஊடகங்களை கண்காணிக்கக் கோரிக்கை

கொழும்பு, மே.03

கிழக்கு மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடையும் வரை அரசு இலத்திரனியல் ஊடகங்களைக் கண்காணிப்பதற்கு உரிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் திற்குச் சொந்தமான வானொலிச் சேவை

(12ஆம் பக்கம் பார்க்க)

# கைக்குண்டுவீச்சை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம்!

## செங்கலடிப் பகுதியில் பதற்றம்

கொழும்பு, மே 03

மட்டக்களப்பு, ஏறாவூர், செங்கலடிப் பகுதியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியி னரின் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டோர் மீது நேற்று முன்தினம் இரவு

(12ஆம் பக்கம் பார்க்க)

# சமரச முயற்சி எதுவும் இன்றி விமலின் காலக்கெடு முடிவு

கொழும்பு, மே 03

ஜே.வி.பியில் இருந்து நீக்கப்பட்ட விமல்வீரவன்ஸ, பேச்சு நடத்தி இணக்கத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விடுத்திருந்த காலக்கெடு முடிவடைந்ததையடுத்து, புதிய கட்சி ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக்கவும் விமல் வீரவன்ஸ

(12ஆம் பக்கம் பார்க்க)

# தெஹிவளை, மொரட்டுவப் பகுதிகளில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

## 13 பேர் கைதுசெய்யப்பட்டனர்

கொழும்பு,மே 03

கொழும்பின் புறநகர் பகுதியான தெஹி வளை மற்றும் மொரட்டுவப் பகுதிகளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் மேற்கொண்ட சுற்றி

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மகிழ 20 08 1970 — அனைவரும் நெகிழ 03 05 2004



### அமரர் தில்லைநாதன் கெங்காதரன்

**(உரிமையாளர்- தரன் மரக்காலை, கொக்குவில்)**

கெங்காதரன் என்ற மங்காத பெயர் கொண்ட மாணிக்கமே
ஆண்டுகள் நான்கு அருளாமற் சென்றதையா
ஆற்றொணாத் துயரில் அமிழ்ந்தித் தவிக்கின்றோம்
வேண்டுமென்றோ நீரும் விண்ணுலகில் உறைகின்றீர்
விரைந்து வந்து எமது வேதனையைத் தீரும் ஐயா
ஈண்டு வருவீர் என்று எண்ணி இலவு காத்த கிளியானோம்
இன்னல்கள் நிறைந்து இருண்டதையா எம்வாழ்வு
நீண்ட பயணத்தை நிறுத்திவிட்டு வாரும் ஐயா
நெஞ்சம் கலங்குகின்றோம் நினைவு தடுமாறுகின்றோம் (73750)

*மில் ஒழுங்கை, மல்லாகம்.* குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர் க. குணசீலன் அவர்களின் மாமனார்

### அமரர் டாக்டர் M. சிற்றம்பலம்

01.05.2008இல் சிவபதமடைந்த செய்தி அறிந்து துயரடைகிறோம். அவரது பிரிவால் வாடும் குடும்பதினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்,
யா/ மட்டுவில் கமாலாசனி வித்தி.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி வேலாயுதம்பிள்ளை செல்வராணி

மலர்வு 14 ★ 02★ 1919

உதிர்வு 29 ★ 03★ 2008

அன்னமூட்டி அறிவமுதளித்து-அவனியிலே
உன்னத நிலைக்கு எம்மை உயர்த்திட்ட உத்தமியே
''காற்றோடு கலந்து மாதம் ஒன்று ஆனதுவோ
ஈரவிழிகள் காயவில்லை நெஞ்சமதை நனைக்கிறதே
எம்மோடு உறவாட மீண்டும் நீ வாராயோ''
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*செல்வராசா நிர்மலா,*
*நாமகள் லேன்,*
*கொக்குவில்.* (73762) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா கந்தையா

மந்துவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது மொறட்டுவையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கந்தையா நேற்று (02.05.2008) வெள்ளிகிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் காலஞ்சென்ற முத்தர் கந்தையாவின் அன்பு மனைவியும், சிவகாமசுந்தரி (கொழும்பு), சூரியகுமாரன் (நகரசபை, சாவகச்சேரி), ஞானச்சந்திரன் (மக்கள் வங்கி, சாவகச்சேரி), சிவஞானசுந்தரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ஸ்ரீஸ்காந்தராஜா மற்றும் தனபாக்கியம், கமலா தேவி, நித்தியானந்தன் ஆகியோரின் மாமியும், செந்தூரன், சிந்துஜா, தர்சிகா, தஜீபன், தர்மிகா, விவேந்தன், வைஸ்ணவி ஆகியோரின் பேர்த்தியும் மந்துவில் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மகளும், நாகம்மா, பார்வதிப் பிள்ளை, கிருஸ்ணபிள்ளை, சரஸ்வதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

தகவல்:
க.சூரியகுமாரன் (மகன்)

## சிவாஜியின் மணிவிழா நிகழ்வு ஸ்கந்தாவில்

யாழ்ப்பாணம், மே 3

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜியின் மணிவிழா நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி பி.ப. 12.30 மணிக்கு கல்லூரியின் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஆசியுரையினை மூதறிஞர் சிற்பி (சிவசரவணபவன்) நிகழ்த்தவுள்ளார். மணி விழாவை ஒட்டி சிறப்புமலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது. விழா நிறைவடைந்த பின்னர் பிற்பகல் 3.30 மணியளவில் விழா நாயகன் அவரது இல்லத்துக்கு கல்லூரி சமூகத்தால் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவார்.

## வாரத்தில் ஏழுநாள்களும் இன்று முதல் மணல் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 3

குடத்தனை மணல் திட்டியில் இருந்து வாரத்தில் ஏழுநாள்களும் இன்று முதல் மணல் விநியோகம் இடம் பெறும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

பொது மக்களாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படும் சுனாமி வீடமைப்புத்திட்டங்கள், உலகவங்கி வீடமைப்புத் திட்டங்கள், அரச நிதிமூலம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்கள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கி விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும் கூடுதல் மணல் தேவையாக உள்ளதால் வாரத்தில் ஏழுதினங்களும் விநியோகம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

சனி, ஞாயிறு தினங்களிலும் சகல மணல் அனுமதிப் பத்திரங்களுக்கும் மணல் விநியோகம் இடம் பெறும் என்றும் அவர் கூறினார்.

## வட இந்து மகளிர் கல்லூரியில் பற்சிகிச்சை நிலையம்

யாழ்ப்பாணம், மே 3

பருத்தித்துறை கல்விக்கோட்ட மாணவர்களின் நலன் கருதி பாடசாலை பற்சிகிச்சை நிலையம் ஒன்று வட இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் க.செல்வராசா இந்த நிலையத்தை திறந்துவைப்பார்.

உடுப்பிட்டி பாடசாலை பற்சிகிச்சை நிலையம் வாரத்தில் வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாள்களும் வட இந்து மகளிர் கல்லூரி பற்சிகிச்சை நிலையம் வாரத்தில் திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய 3 நாள்களும் இயங்கும். (1)

## ஆஸ்பத்திரி உண்டியல் உடைத்துத் திருட்டு

வலி.தென் மேற்கு, மே 3

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலையின் உண்டியல் பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்து பணம் திருடப்பட்டுள்ளது.

இவ் வாரம் இரவு வேளையில் இந்த உண்டியல் பெட்டியை எடுத்து பக்கத்திலுள்ள பனை வடலி காணியில் வைத்து உடைத்து விட்டு அதிலிருந்து பணம் திருடப்பட்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (1-135)

**தவறிவிட்டது:** *இல.39, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய சரவணபவானந்தன் தவரஞ்சன் என்பவருடைய தே.அ.அ. (910650556V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். தொ.பே: 021 222 6008*

SHAN COMPUTER
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
INUVIL MANCHATHADY T.P. 0774975867

அனைத்துப் புதிய பிரிவுகளும் ஆரம்பம்

அனைத்து வயதினருக்குமான கணினி கற்கை நெறிகள் ஆரம்பம்
03.05.2008 தொடக்கம் ஆரம்பமாகிறது
ஒவ்வொரு மாணவருக்கும் தனிக்கவனம்செலுத்தப்படும்.

* Diploma in Microsoft Office ~~3000/=~~ 1000/=
* Diploma in Computerized Accounting ~~4000/=~~ 2000/=
* Diploma in AutoCAD ~~4000/=~~ 2500/=
* Diploma in Hardware Engineering ~~4000/=~~ 2000/=
* Diploma in Video Editing ~~4000/=~~ 2500/=
* Diploma in Desktop Publishing ~~3500/=~~ 1500/=

## மிருதங்க அரங்கேற்றம்

கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனும், இணுவில் இளந்தொண்டர் சபை மாணாக்கனுமாகிய செல்வன்

### கமலநாதன் தேசிகன்



04.05.2008
ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணி
இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபை மண்டபம்

தலைவர்
திரு.செ.சோதிப்பெருமாள்

அரங்கிசைக் கலைஞர்கள்

| பாட்டு | மிருதங்கம் | வயலின் |
|---|---|---|
| இசைமாணி தவநாதன் றொபேட் | செல்வன் கமலநாதன் தேசிகன் | வித்துவான் திரு.அ.ஜெயராமன் |
| கஞ்சிரா | முகர்சிங் | தம்புரா |
| கலாவித்தகர் கி.அனந்தகோபன் | கலாவித்தகர் சி.செந்தூரன் | செல்வன் க.ராஜீவன் |

கலா ரசிகப்பெருமக்கள் அனைவரும் வருகை தந்து அரங்கேற்ற நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே நாடும்

வட்டுவினி
இணுவில் மேற்கு, இணுவில்

திரு.திருமதி.கமலநாதன் குடும்பம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகேஸ்வரி தம்பித்துரை (குஞ்சு, கைதடி)



கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தம்பித் துரை 02.05.2008 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர் - சேதுப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான நடராசா- சின்னப்பிள்ளை தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும் பரமேஸ்வரி, முத்துக்குமாரசாமி, செல்லம்மா காலஞ்சென்ற கதிர்காமநாதன் ஆகியோரின் சகோதரியும் சியாமளா, வக்சலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜலிங்கம் (உதயன் – பவானி களஞ்சியம், நீர்வேலி), கிருஸ்ணவேல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் பவிஸ்ணன், ஹரிஸ்ணன், சஜிஸ்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: உதயன்
(பவானி களஞ்சியம், நீர்வேலி)

### திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சரஸ்வதி நேற்று (02.05.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், பாஸ்கரன் (ஜேர்மன்), புஸ்பரூபன் (ஜேர்மன்), காலஞ்சென்ற யசோதாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுசியா (ஜேர்மன்), ஜெயலோசினி (ஜேர்மன்), இலட்சுமிகாந்தன் (I.C.R.C ஊழியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சதாசிவம், தர்மலிங்கம், பகவதி மற்றும் சொர்ணலிங்கம், சற்குணம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோகுல வீதி, உரும்பிராய் மேற்கு, கோண்டாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (03.05.2008) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோகுல வீதி,*
*உரும்பிராய் மேற்கு,*
*கோண்டாவில்.* (73756)

தகவல்:
பேரப்பிள்ளைகள்:
அருள்ராஜா, கவிதா.

### திருமதி சுவர்ணா நிதாஸ்கரன்



(3 ஆம் வருட கலைப்பீட மாணவி)

கவுந்தில், கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவர்ணா நிதாஸ்கரன் 01.05.2008 வியாழக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் நிதாஸ்கரன் (கணக்காளர், அம்பாறை) அன்பு மனைவியும், மகாலிங்கசிவம் (ஓய்வுபெற்ற அதிபர்)-அமரர் பார்வதிதேவி தம்பதிகளின் அன்பு மகளும், அமரர் மகாலிங்கம் - குலராஜவதி தம்பதிகளின் அன்பு மருமகளும், பகீரதன் (ஊர்காவற்றுறை பிரதேசசபை), பரந்தாமன் (கனடா), சுமணா (ஆசிரியை, புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாஸ்கரன் (சிலாபம்), பகீரதன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), கதிர்கரன் (கனடா), சிவராசா சபிதா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.05.2008) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது கவுந்தில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கவுந்தில், கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.*

**தகவல்:**
மகாலிங்கசிவம் (தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தர விளையாட்டுப் போட்டிகளில் தமிழ் அலுவலர்களும் கடமையாற்றும் வாய்ப்புத் தற்போது ஏற்பட்டு வருகின்றது


சர்வதேசத் தடகள விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்தொழில்நுட்ப அலுவலர்கள் பங்குகொண்டு பயன்பெறக் கூடிய வாய்ப்பு இப்போது ஏற்பட்டு வருகிறது. 91ஆம் ஆண்டு இடம்பெற்ற சர்வதேச தரப் போட்டியான தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 5 தொழில்நுட்ப அலுவலர்கள் மட்டுமே கலந்துகொண்டோம். பின்னர் நாம் மேற்கொண்ட முயற்சியின் பலனாக 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆசிய நாடுகளுக்கிடையிலான போட்டியில் 44 தமிழ், முஸ்லிம் அலுவலர்கள் கலந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. எதிர்காலத்தில் இது மேலும் அதிகரிக்கும். இவ்வாறு இலங்கை மெய்வன்மைச் சங்கத்தின் வடக்குக் கிழக்குக்கான இணைப்பாளர் தம்பையா மரியநாயகம்பிள்ளை தெய்வேந்திரம் தெரிவித்தார்.

தடகள தொழில்நுட்ப அலுவலர்களுக்கான கருத்தரங்கு ஒன்றை நடத்துவதற்கு யாழ். வந்த அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

தடகள விளையாட்டுத் தொழில்நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சை தமிழ் மொழியில் நடைபெறுவதற்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், இலங்கை மெய்வன்மைச் சங்கத்தைச் சேர்ந்த வைத்திய திலக, ஜெயவீர ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தைப் பொறுத்தவரையில் வடக்கு-கிழக்குக்கு அனைத்து உதவிகளையும் வழங்க அது தயாராக உள்ளது. இதனை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வது எங்களுடைய ஆற்றலிலும் தேவையிலிலுமே தங்கியுள்ளது.

தமிழ் முஸ்லிம் அலுவலர்கள் இத்தகைய போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பல முயற்சிகளை முன்னர் விளையாட்டு அலுவலரும், வடக்கு கிழக்குமாகாண விளையாட்டுத் துறை முன்னாள் பணிப்பாளருமான அமரர் குணரட்ணம் உட்பட பலரும் மேற்கொண்டிருந்தனர்.



2002ஆம் ஆண்டு போட்டியில் வடக்கு- கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் இருந் தும் தொழில்நுட்ப அலுவலர்கள் போட்டி யில் கலந்துகொண்டனர்.

தற்போது வடக்குக் கிழக்கில் 270 தொழில்நுட்ப அலுவலர்கள் காணப்படுகின்றார்கள். தரம் 4இல் 240 பேரும் தரம் 3இல் 30 பேரும் உள்ளனர். மேலும் வடக்குக் கிழக்கில் மெய்வல்லுநர் போட்டிகளுக் கான தொழில்நுட்ப அலுவலர்களின் திறன்களை வளர்க்கவும் பயிற்சியாளர்களை உருவாக்கவும் என 32 பேர் தெரிவு செய்யப்பட்டபோதிலும் 30 பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டன. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 4 விளையாட்டு அலுவலர்கள் இப் பயிற்சியைப் பெற்றுள்ளார்கள்.

தரம்1 அலுவலர்களுக்கான பயிற்சிகள் கொழும்பில் இடம்பெற்று வருகின்றன. இதிலும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கொழும்பு வந்து பயிற்சி பெற்றுகொள்ள முடியும். சிலர் கலந்துகொண்டும் வருகின்றார்கள்.

இந்தப் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதில் மொழி என்பது பெருந் தடையாக இருக்கின்றது. இதற்கு ஒரு தீர்வாக வடக்கு கிழக்கில் இருந்து 8 பேரைத் தெரிவு செய்து பயிற்சிகளை வழங்கவேண்டும். இதற்கான முன்நடவடிக்கைகளையும் தற்போது மேற்கொண்டு வருகின்றோம். வடக்கு-கிழக்கில் தொழில்நுட்ப அலுவலர்களின் முன்னேற்றத்திற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த அலுவலர்களின் வளர்ச்சி துரிதப்படுத்தப்படவேண்டும். இதற்கு உரிய தொழில்நுட்ப அலுவலர்களும் தமது பங்களிப்பைச் செய்யவேண்டும்.

தொழில்நுட்ப அலுவலர்களின் வளர்ச்சியுடன் மட்டும் மாவட்ட மெய்வல்லுநர் சங்கங்கள் நின்றுவிடக் கூடாது. மாவட்டங்களுக்கிடையேயும் நட்பு ரீதியான போட்டிகளை நடத்தவேண்டும். குறிப்பாக 15, 17 வயதுப் பிரிவுகளின் இருபாலாருக்கும் தடகளப் போட்டிகளை நடத்துவதன் மூலம் விளையாட்டு வீரர்களை வளர்த்துக்கொள்வதுடன் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் அது பயிற்சியாக அமையும்.

தேசிய மட்டத்தில் தடகளப் போட்டிகளில் தொழில்நுட்ப அலுவலர்களாக கடமையாற்ற மூன்று பேர் தெரிவுசெய்யப்படவுள்ளார்கள். தடகளப் போட்டி வீர, வீராங்கனைகளை பயிற்றுவிப்பதற்கான பயிற்சியாளர்களுக்கான அறிவூட்டல் வகுப்புகளும் செயல்முறைப் பயிற்சிகளும் யாழ். மாவட்டம் உட்பட வடக்கு-கிழக்கில் நடத்த முற்னேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

இந்த வகையில் அண்மையில் வெளியான தடகளப் போட்டிகளுக்கான மாற்றங்கள்அடங்கிய புதியநூல் யாழ்ப்பாணத்திலேயே முதல் தடவையாக இம்முறை வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

## மெய்வன்மைச் சங்கத்தின் வடக்கு - கிழக்குக்கான இணைப்பாளர் தெய்வேந்திரம் உதயனுக்குச் செவ்வி

- செவ்வி: நேசன் -

## சுழிபுரம் பகுதிகளில் திருடர் தொல்லை

சுழிபுரம்,மே3

சுழிபுரம் பகுதியில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இவர்களால் ஆங்காங்கே தென்னையில் உள்ள தேங்காய்கள் களவாடப்பட்டு வருகின்றன.

தேங்காய் விலை அதிகமாகவுள்ளதால் திருடர்கள் தேங்காய்திருட்டில் அதிகமாக ஈடுபட்டு வருகின்றனர் என மக்கள் விசனம் தெரிவிகின்றனர்.

கடந்த வாரம் நான்கு காணிகளில் களவு நடைபெற்றுள்ளது எனவும் பகல் வேளையில் இது இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (203-28)

## கூட்டங்கள்

குருநகர்,மே3

யாழ்.புனித மரியாயின் சேனையின் மாதாந்த கொமிசியக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வண.பிதா றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. (203-51)

* * *

யாழ்ப்பாணம்,மே3

யாழ்.பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்கள் அனைவரையும் சமூகம் தருமாறு பிரதேச செயலர் கேட்டுக்கொண்டுள்ளார். (203)

* * *

வலி.தென்மேற்கு,மே3

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவு சிறுவர் கண்காணிப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கிராமமட்ட சிறுவர் கண்காணிப்புக் குழுக்களின் உறுப்பினர்கள், சிறுவர் தொடர்பான வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வரும் அரச மற்றும் அரச சார்பற்ற உதவி வழங்கும் நிறுவனத்தினர் மற்றும் சிறுவர் தொடர்பான அரச திணைக்களத்தினர் ஆகியோர் கலந்து கொள்வர். (203-135)

* * *

யாழ்ப்பாணம்,மே3

மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

வலி.தென்மேற்கு,மே3

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிம் நடத்தும் மாதாந்த கருத்தரங்கு யாழ். ஆனைப்பந்தியிலுள்ள அலுவலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ ப.மனோகரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் கருத்துரை வழங்குவார். (203-135)

# சொந்த நலனுக்காக அதிகாரத்தை பயன்படுத்தாது மக்களின் மனம் கோணாதவாறு செயற்படுங்கள்

## அலுவலர்களுக்கு அரச அதிபர் அறிவுறுத்து

நல்லூர்,மே3

சொந்த நலன்களுக்காக அதிகாரத்தைப் பயன்படுத்துவது நல்லாட்சிக்கான அடையாளமாகாது.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் தமது தேவைகளை நிறைவேற்றலாம் என்ற நம்பிக்கையுடன் அதிகாரிகளை நாடிவரும் மக்களின் மனம் கோணாதவாறு செயற் பட்டு அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அரச உத்தியோகத்தர்கள் செயற்படவேண்டும்.

வேலணை பிரதேச செயலகத்தில் ஆள்களைப் பதிவுசெய்யும் அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசிய யாழ். அரச அதிபர் க.கணேஷ் இவ்வாறு கூறினார்.

வேலணைப் பிரதேச செயலாளர் மு. நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரச அதிபர் கே. கணேஷ் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

### அடையாள அட்டையின்றி வாழ்வில்லை!

உணவு, உடை, உறைவிடமின்றி ஒரு நாள் வாழமுடிந்தாலும் அடையாள அட்டையின்றி வாழமுடியாது.

குடிநாட்டின் முக்கிய தேவையாக இன்று இது உள்ளதால் அனைத்து மக்களும் தமக்குரிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் தற்போது அடையாள அட்டைகளுக்கான அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அரச ஊழியர்கள் மிகவும் நேர்மையுடனும் கண்ணியத்துடனும் தமது கடமைகளைச் செய்யவேண்டும்.

மக்கள் உங்களைத் தவறான பேர்வழிகள் என்று கருதி ஒதுக்கும் நிலை ஏற்படாதவாறு சேவைகளை நிறைவேற்றுங்கள்.



பின்தங்கியுள்ள இந்தக் கிராமம் உங்கள் அளப்பரிய பணியினால் வளர்ச்சியடைந்தது என ஒவ்வொரு பிரஜையும் உங்களை நினைக்கும் வகையில் உங்கள் சேவைகள் அமையட்டும் - என்றார்.

வேலணைப் பிரதேச செலயர் மு.நந்தகோபாலன் தனது தலைமையுரையில் இடைக்காலத்தில் ஏற்பட்ட பின்னடைவுகள் படிப்படியாகக் களையப்படுவதன் மூலம் வேலணைப் பிரதேசம் 1991ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையை எட்டும் என்ற நம்பிக்கை எங்களிடம் இருக்கிறது.

எமது அரச அதிபர் இந்தப் பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் கரிசனை கொண்டு அதற்கான நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி வருகிறார்.

எமது செயலகத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களும் ஒற்றுமையுடன் செயற்பட்டு இந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்கான திட்டங்களைச் செயற்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளனர்.

இன்று இந்தப் பிரதேசம் முன்னைய நிலைமைக்கு வந்துகொண்டிருப்பதற்கு அரச அதிபர் மற்றும் இங்கு கடமையில் உள்ள அனைவருமே காரணமாகிறார்கள்- என்றார். (203-111)



மேதினத்தை முன்னிட்டு அகவிழியகத்தில் தொழிலாளர் ஒத்துழைப்புக் குழுவால் நடத்தப்பட்ட மேதினக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் அந்த அமைப்பின் பிரமுகர்களான வே.சிவராஜா, எஸ்.சிவபாலன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் இரண்டு படங்களிலும் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்த படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முக்கிய அறிவித்தல்**

வெற்றிவேல் நிறுவன ஆதரவுடன்
இணுவில் கலை ஒளி மன்றம் நடத்தும்

**ஓவியக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும் - 2008**

கடந்த 06.04.2008 அன்று நடைபெறவிருந்த மேற்படி நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டமை தெரிந்ததே. இந்நிகழ்வு நடைபெறும் காலம் மற்றும் மேலதிக விவரங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இணுவில்.

தலைவர்,
கலை ஒளி மன்றம், இணுவில்.
(73742)

## துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

மந்திகை மே3

புத்தாண்டை முன்னிட்டு இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்திவரும் மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

காலை 8.30 மணி – மகேசன் வி.க. எதிர் மைக்கல் வி.க.,பி.ப. 3 மணிக்கு – ஞானம்ஸ் வி.க. எதிர் அண்ணா சிலையடி வி.க.,

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (203–218)

**ஒத்துமாறல்**

வலிகாமம் கல்வி வலயத்தில் விஞ்ஞான பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர் யாழ்.வலயத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு:
021-4590731 / 077-6141176
14, கோயில் வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(73753)

# தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்டம் (ராரப்)
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

## " ஆ.அ.வ" கடன் இல. 0006 – SRI(SF)

## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைக்கான கேள்வி அறிவித்தல் இல: 05

1. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்ட (TAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ" ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக் கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா ) |
|---|---|---|---|---|
| 01. | JF/TAARP/ED/01 | பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய 90'x 25' அளவுடைய இருமாடி கட்டடம் ஆய்வு கூடம் உள்ளடங்கலாக மீளமைத்தல் | M6 (கட்டங்கள்) | 100,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்க ளுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

iii) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

iv) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

v) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 021-2223625, தொலைநகல்: 021- 2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk

6 ஒப்பந்த ஆவணங்கள் வைகாசி மாதம் 5 ந் திகதி 2008 முதல் வைகாசி மாதம் 21 ந் திகதி 2008 வரை முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறியுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணம்" இற்கு வைகாசி மாதம் 28ந் திகதி 2008 பி.ப. 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் வைகாசி மாதம் 16 ந் திகதி 2008 பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க. கணேஸ்,**
**தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

## மூன்றாண்டு நினைவஞ்சலி

மலர்வு
28 ✱ 06 ✱ 1977



உதிர்வு
06 ✱ 05 ✱ 2005

### திருமதி ஜெயசுதா அம்பிகைபாகன்

திதி: அபரபக்க திரயோதசி

மூன்றாண்டு காலம் எமை விட்டு மறைந்த தெப்போ
கரவிழி காயவில்லை இதய அலை ஓயவில்லை
எத்தனையோ செல்வத்தை எமக்களித்துச் சென்றாலும்
அத்தனைக்கும் மேலான அன்புச் செல்வம் நீ எமக்கு
ஈடான செல்வமுண்டோ? இறைவனையே
துதிக்கின்றோம் உன் ஆத்மா சாந்திபெற.

"சதாபவனம்',
பாடசாலை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(73747)

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவர், பாசமிகு அப்பா,
அம்மா, அண்ணாமார், தங்கை,
மருமக்கள், மாமி, மச்சான்மார்,
மச்சாள்மார், உற்றார், உறவினர்கள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
24 . 10 . 1957



மறைவு
25 . 04 . 2006

### அமரர் இ.து.சிவராசா J.P.

(செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை)

திதி: திரயோதசி

காற்றோடு நீர் கலந்து இன்றோடு ஆண்டிரண்டுகள்
நேற்றுவரை தேடி விட்டோம் எம்மிடம் நீர் வரவில்லை
பார்த்திருந்த பல பொழுது பலனின்றிப் போனாலும்
வாழும் வரை உங்களது வரவுக்காய்க் காத்திருப்போம்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.
புத்தூர்.
(73749)

என்றும் நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் மார்க்கண்டு

நாகர் கோயில் வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது திருச்சியில் வசித்துவந்தவருமாகிய திருமதி பாக்கியம் மார்க்கண்டு அவர்கள் 01.05.2008 அன்று திருச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மார்க்கண்டுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி க.இலட்சுமிப்பிள்ளையின் அன்புச் சகோதரியும் சிவகுருநாதன் (தலைவர், நாகர்கோயில் வடக்கு கௌத்தம்துறைப் பிள்ளையார் கோயில்),. சிவதேவி (திருச்சி), புகனேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயும் கன்னிகாபரமேஸ்வரி (திருச்சி), அருமைத்துரை (திருச்சி), அன்னரூபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் கனகராசா (நோர்வே), கிரிஜா (லண்டன்), மதிமுகராசா (லண்டன்), வரதராசா (திருச்சி), அருளானந்தராசா (திருச்சி), கமல்ராசா (நோர்வே) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் கோகுலன் (லண்டன்), யாதவன் (லண்டன்) கலைப்பிரியா (திருச்சி) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் லாவண்யா, அபிமன்யு, மதுசன் (லண்டன்), கஜனன், கஜாலினி (நோர்வே) ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருச்சியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகர்கோயில் வடக்கு,
நாகர்கோயில்.

தற்காலிக முகவரி:
உபயகதிர்காமம்,
புலோலி.
(73743)

தகவல்:
செல்வி அன்னலட்சுமி
கந்தசாமி
(ஓய்வுபெற்ற ஆசிரியை-
மருமகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவு ப.நோ.கூ. சங்கத்தின் 'கோப்சிற்றி' நிலையம் திறப்பு

நல்லூர்,மே3

புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 'கோப்சிற்றி' விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் சம்பிரதாயபூர்வமாகக் 'கோப்சிற்றி'யைத் திறந்துவைத்தார்.

சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ரி. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழா நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், யாழ்.கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.சிவலிங்கம், சமூக சேவைகள் அமைச்சின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஏ.மோகன், வேலணை அமைப்பாளர் சி.சிவராசா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

'கோப்சிற்றி' நிலையங்களை விஸ்தரிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் என திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வேலணைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ந.கருணாகரமூர்த்தி தெரிவித்தார். (202-111)

# மீசாலை வடக்கிலிருந்து வரணிக்குச் செல்லும் வீதி மோசமாகச் சேதம்

யாழ்ப்பாணம்,மே3

மீசாலை வடக்கு வேம்பிராய் சந்தியிலிருந்து வரணிக்குச் செல்லும் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

2000ஆம் ஆண்டின் பின் இவ்வீதி மோசமாகச் சேதமடைந்ததால் மந்துவில், இயற்றாலை, தாவளை, வரணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் இவ்வீதியில் பயணம் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீதி சேதமடைந்ததால் பருத்தித்துறையிலிருந்து இவ்வீதியூடாகச் சாவகச்சேரி செல்லும் பேருந்துச் சேவையும் நடத்தப்படுவதில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வீதியைத் திருத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (202-207)

## சமய சந்நிதிகளில்

நல்லூர்,மே3

திருநெல்வேலி நீலாயதாஷி சமேத ஸ்ரீ காயரோகண சுவாமிகள் ஆலயத் தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (203-111)

* * *

யாழ்ப்பாணம்,மே3

சாவகச்சேரி சப்பச்சி மாவடி பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் பத்தாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 18ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-207)

* * *

சுழிபுரம்,மே3

சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும்18ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

எதிர்வரும் 23ஆம் திகதி சங்காபிஷேகம் இடம்பெறும். (203-28)

* * *

சுழிபுரம்,மே.3

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய மணவாளக்கோல பூசைகள் எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம் பெறும். (203-28)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மறவன்புலோ தெற்கில் 185 ஹெக்டெயரில் நெற்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி

### திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் பதிவுகள் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,மே3

தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ தெற்குப் பகுதிகளில் 185 ஹெக்டெயர் வயலில் இவ்வருடம் செய்கை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த இரண்டு வருடங்களாக இப்பகுதிகளில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வருடம் இவ்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ளவுள்ளவர்களின் விவரங்கள் எதிர்வரும் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் காலை 8 மணிதொடக்கம் பி.ப. 2 மணி வரை கைதடி கமநலசேவைகள் நிலையத்தில் பதிவுசெய்யப்படவுள்ளன.

இவ்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ளவுள்ளவர்கள் நெற்செய்கை வயலுக்குரிய உறுதியின் பிரதி, முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம் ஆகிய விவரங்களைப் பதிவுசெய்யுமாறு மறவன்புலோ விவசாயச் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர்.

இவ்வயல்களில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்குமாறு வயல் உரிமையாளர்கள் பிரதேச செயலரை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-207)



தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் அபிவிருத்திக் குழுவினரால் பிரதேச யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்புகள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

உதவிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் பயிற்சி வகுப்பினை நாடா வெட்டித் திறந்துவைப்பதையும் அருகில் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி அலுவலர் திருமதி லோ.பிரணவன், கிராம அபிவிருத்திப் பிரிவு நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் திருமதி ர.குகதாஸ் ஆகியோரும் காணப்படுகின்றனர். (207)

# நெடுந்தீவு வைத்தியசாலையில் நடைபெற்ற யாழ்.சுகாதார அதிகாரிகள் ஆய்வுச் சேவை

குருநகர்,மே3

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தினால் நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஊழியர் நடமாடும் ஆய்வுச் சேவை நடத்தப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் டாக்டர். ஆ.கேதீஸ்வரன் தலைமையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த 36 அலுவலர்கள் இந்த ஆய்வுக் சேவையில் கலந்துகொண்டனர்.

யாழ்.பிராந்திய சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் அலுவலக தாய்சேய் நலன் வைத்திய அதிகாரி டாக்டர் தி.சிவசங்கர், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவலிங்கம், கணக்காளர் கே.ஆர்.துரைசிங்கம், மாவட்ட மருந்தாளர் ஆர்.குமாரதாசன் மற்றும் அலுவலர்கள் இந்த ஆய்வுச்சேவையில் பங்கேற்றனர்.

அந்த வைத்தியசாலையின் பௌதீகத் தேவைகள் ஆராயப்பட்டு இது தொடர்பாக முடிவு செய்யப்பட்டதுடன் இவ்வைத்தியசாலையின் பாவனைக்குதவாத பொது மற்றும் மருத்துவ உபகரணங்கள் அழித்தொழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்களுடனான கலந்துரையாடலும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நடமாடும் ஆய்வுச்சேவையில் கலந்துகொண்ட யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக பணியாளர்களுக்கு நெடுந்தீவுக் கடற்படையினர் தேநீர் விருந்து வழங்கிக் கௌரவித்ததுடன் இவர்களுக்கான போக்குவரத்துச் சேவையையும் வீதி அதிகார சபையுடன் சேர்ந்து ஒழுங்குசெய்தார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (202-51)



மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில் 26 வருடங்கள் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் டாக்டர் க.பேரானந்தனுக்கு வைத்தியசாலை ஊழியர்களால் பிரியாவிடை வைத்து கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம். (100)

## நிகழ்வுகள்

வலி.வடக்கு,மே3

அறவழிப் போராட்டக் குழு நடத்தவுள்ள தணனி வன்பொருள் திருத்தும் பயிற்சி நெறி ஆரம்பவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அறவழி தொழில் பயிலகத்தில் இடம்பெறவுள்ளது.

கனடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் இப்பயிற்சி நெறி மேற்கொள்ளப்படவுள்ளது.

அறவழிப் போராட்டக் குழுத்தலைவர் வீ.ஸ்ரீ சக்திவேல் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக எஸ்.ரி.பி. நிறுவன அதிபர் எஸ்.சிவலிங்கமும் கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.சிவநாதன், சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையின் முகாமையாளர் திருமதி க.ஜீவகதாஸ், கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவன திட்ட அலுவலர் ஏ.ஏடின் ஆகியோரும் கலந்துகொள்வர். (203-86)

* * *

வடமராட்சி வடக்கு,மே.3

இலங்கை கலை இலக்கிய சங்கத்தின் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் துன்னாலை வடிவேலர் மணிமண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி சிறப்பு விருந்திராகவும் கலந்துகொள்வார். (203-218)

* * *

சுழிபுரம்,மே3

சைவமணி சி.மருதபிள்ளை ஆசிரியரின் ஓராண்டு நினைவு விழாவும் மலர் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரார்த்தனை உரையை சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார். தொடர்ந்து நினைவு நூல் வெளியீடு, நினை வுப் பேருரை என்பன இடம்பெறும். (203-28)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் நாய்களால் தொல்லை

யாழ்ப்பாணம்,மே3

யாழ்.போதனா வைத்தியசாலையில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த நாய்கள் இரவுநேரங்களில் நோயாளர்கள் விடுதிகளுக்கு செல்லும் பாதைகளில் மலசலங்களைக் கழித்து வருகின்றன. இதனால் நோயாளர்களும் அவர்களது உதவியாளர்களும் மற்றும் ஆஸ்பத்திரி உத்தியோகத்தர்களும்பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

குட்டி ஈன்ற நாய்களும் இவற்றில் காணப்படுவதால் அவை அப்பகுதிகளால் செல்வோரைக் கடிப்பதற்காக துரத்துகின்றன.

கடந்த சில நாள்களில் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களில் 15 பேர் வரை நாய்களினால் கடியுண்டு ஏ.ஆர்.வி. தடுப்பு ஊசி ஏற்றப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (203-78)

# யாழ்.கனகரத்தினம் வித்தியாலயத்தில் நவோத்யா வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம்,மே3

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று தொடக்கம் எதிர்வரும் 9ஆம் திகதிவரை நவோத்யா வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனைமுன்னிட்டு இன்றும் நாளையும் வித்தியாலயத்தில் சிரமதானப் பணிகள் இடம்பெறவுள்ளன.

இதில் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன்விரும்பிகள் ஆகியோர் இணைந்துகொள்ளவுள்ளனர்.

திங்கட்கிழமை சமய, சமூக விழுமிய தினம் கொண்டாடப்படவுள்ளது

செவ்வாய்க்கிழமை விஞ்ஞான, கணித தொழில்நுட்ப தினமும் புதன்கிழமை மொழித்திறன் மதிப்பீட்டுத் தினமும் வியாழக்கிழமை விளையாட்டு, உடற்பயிற்சி தினமும் வெள்ளிக்கிழமை மாணவர் ஆக்க மதிப்பீட்டுத் தினமும் கொண்டாடப்படவுள்ளது.


பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில்:
20.10.1936

அனைவரும் நெகிழ
03.04.2008



# அமரர் வேலன் இராசையா

எங்கள் அன்புத் தெய்வமே - நீங்கள்
இவ்வுலகம் விட்டுச்சென்று - இன்றுடன்
மாதம் ஒன்று மறைந்து போனதுவோ
நம்ப முடியவில்லையே அப்பா - உங்கள்
நினைவுகளைச் சுமந்த நெஞ்சங்களுடன்
தினம் நினைந்துருகும் எங்களுக்கு
நாள்களை எண்ணுவதற்கேது நேரம்.....

எழுபத்தி இரண்டு வருடங்கள்
இவ்வுலகில் வாழ்ந்து - நீங்கள்
எங்களுக்காய்ப் பாடுபட்டு
இமயம் என உயர்ந்து நின்று - எம்மை
ஏற்றமுற வைத்தீர் அப்பா
மாதங்கள் ஒன்று என்ன
யுகங்கள் பல ஆனாலும்
மறந்திடுமோ உங்கள் நினைவு....

சின்ன வயதில் நாங்கள்
எண்ணிய இடமெல்லாம் - எங்கள்
கால்கள் வலிக்கும் என்று - உங்கள்
தோளில் சுமந்து சென்று
கோயில் குளங்கள் எல்லாம்
தொழுது வணங்கி எம்மை
நாளும் பொழுதும் நன்றே பேணி
அன்பாய் வளர்த்தீர் அப்பா!
ஆறுமோ எங்கள் மனம்....

பஞ்ச பாண்டவர்களாய்ப்
பிள்ளைகள் ஐவர் எம்மை
பெரிதுவந்து ஈன்றெடுத்து
ஞாலம் முழுக்கப் போற்றுகின்ற
பார் சிறக்கும் கல்வியினை
பாடுபட்டு ஊட்டி வளர்த்து
கூட்டுறவுத்துறை மிளிர ஒருவர்
மருத்துவத்துறை மகிழ ஒருவர்
திரைகடலோடித் திரவியம் தேட மூவர் - என
நானிலமெங்கும் சிறப்புற
நல்வழி காட்டியவரே அப்பா!
எந்நாளும் உமை மறவோம்.....

அன்பின் திருவுருவமாய்
அவனியில் திகழ்ந்தவரே
பண்பின் பிறப்பிடமாய் பாரினில் இருந்தவரே
பாசத்தின் சிகரமதாய்
மாசற்று வாழ்ந்தவரே - உங்கள்
கனிவான பார்வை பணிவான பேச்சு
தயவான குணம் தளராத நெஞ்சு
எங்களோடிருந்த எக்காலமும்
அன்போடு இருந்த அழகான பொழுதுகள்
எண்ணிப் பார்க்கின்றோம் அப்பா எங்கள்
உயிர் உள்ளவரைக்கும்
உங்கள் நினைவோடு இருப்போம் அப்பா

*எமது குடும்பத் தலைவரை இழந்து நின்றவேளையில் ஒடோடிவந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனுதாபிகள் மற்றும் யாழ்.கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், மருத்துவபீட (கொழும்பு) மாணவர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருந்து தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு எமது துயரத்தில் பங்கேற்றோர் மற்றும் பத்திரிகை வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோர் என அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (03.05.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

**குடும்பத்தினர் - மனைவி: இ.பரமேஸ்வரி, பிள்ளைகள்: இ.விஜயமோகனராசா (கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), இ.கஜபதிராசா (பிரான்ஸ்), இ.சுரேந்திரராஜ் (சுவிஸ்), இ.ஜெயந்திரராஜ் (லண்டன்), இ.ரகுணராஜ் (பௌதீக பிரிவு,மருத்துவ பீட மாணவன், கொழும்பு தேசிய வைத்தியசாலை), மருமக்கள்: வி.அசோகாதேவி, க.ஜெனிலா, சு.பிருந்தினி (சுவிஸ்), ஜெ.திருமகள் (லண்டன்), பேரப்பிள்ளைகள்: வி.திவ்வியன், வி.லக்சிகன், க.நிதர்சன், க.சதுஸ்ரிகா, அ.சுவேன் (சுவிஸ்), சு.சஜீவ் (சுவிஸ்).**

**இல. 77, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.**
**T.P 0602216664**

**தகவல்:**
**சி.சிவசுப்பிரமணியம் (மைத்துனர்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் திணைக்களத்துக்கு வருடம் 300 கோடி நஷ்டம்!

## முத்திரை வெளியீட்டில் அமைச்சர் தகவல்

கொழும்பு, மே.03

"தபால் சேவை இன்னும் நவீனமயப் படாதமை காரணமாகத் தபால் திணைக் களத்துக்கு வருடம் ஒன்றிற்கு 300 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுகின்றது."

- இவ்வாறு தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சர் மஹிந்த விஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் ஆறுவகை புதிய தபால் முத் திரைகளை வெளியிட்டுவைத்து உரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரி வித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில் கூறியவை வருமாறு:-

இலங்கைத் தபால் சேவையை அதி நவீனமயப்படுத்த வேண்டிய கட்டாய தேவை எழுந்துள்ளது. போதிய நவீனமுறை கையாளப்படாததால் வருடம் ஒன்றிற்கு 300 கோடி ரூபா நஷ்டம் பாரிய தொகையாக தபால் திணைக் களத்திற்கு ஏற்படுகிறது.

இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டு மென்றால் தபால் திணைக் கள சேவைகள் உடன் நவீனமயப்படுத்தப்படல் அவசியம்.

இதனைக் கருத்தில்கொண்டு முழு தபால் சேவைகளையும் நவீனமயப்படுத்துவதற் கான ஏற்பாடுகளில் அரசு இப்போது ஈடுபட் டுள்ளது.

நவீனமயப்படுத்தப்பட்ட சேவைகளை நாட்டின் பின்தங்கிய கிராமப்புறங்களுக் கும் கொண்டுசெல்வதற்கான நடவடிக்கை கள் எடுக்கப்படும். அப்போதுதான் தபால் சேவை முழுமையடைந்து திருப்திகரமான சேவையாக மக்களிடம் சென்றடையும்.

அத்தோடு தற்போது தபால் மற்றும் தொலைத் தொடர்பு அமைச்சு உலக வர்த் தக மையக் கட்டடத் தொகுதியில் அமைந் துள்ளது. இக்கட்டடத்திற்கு வருடம் ஒன் றிற்கு 360 லட்சம் ரூபா அரசால் வாடகை யாகச் செலுத்தப்படுகின்றது.

இக்கட்டடத்திலிருந்து அமைச்சை வேறிடத்திற்கு மாற்றுவதன் மூலம் இந்தச் செலவைக் குறைத்துக்கொள்ள முடியும்.

இந்த மாதம் தபால் திணைக்களத் தலைமைக் காரியாலயத்துக்கு அமைச்சை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படும். - என்றார்.

இந்த முத்திரை வெளியீட்டு நிகழ்வில் 5 ரூபா, 10ரூபா,12ரூபா, 15 ரூபா, 30 ரூபா மற்றும் 40 ரூபா பெறுமதியான முத்திரை கள் அறிமுகப்படுத்திவைக்கப்பட்டன.(சி)

# கிழக்கை மீண்டும் புலிகளிடம் ஒப்படைக்கவே திட்டமிடுகின்றனர்

## ஐ.தே.க. மீதும் முஸ்லிம் காங்கிரஸ் மீதும் குற்றச்சாட்டு

கொழும்பு, மே.03

படையினரால் மீட்கப்பட்ட கிழக்கை மீண்டும் புலிகளிடம் ஒப்படைக்கும் நோக் கிலேயே ஐ.தே.கட்சியும் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடு கின்றன என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக் கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தச் சதித்திட்டத்தின் ஊடாகக் கிழக்கு மாகாணத்தைத் தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றிணைந்து ஆட்சிசெய்யும் நிலை ஏற் படப்போகின்றது என்றும் சிங்களவர்கள் ஓரங்கட்டப்படப்போகின்றனர் என்றும் அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பை நடத் தியது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவ்வமைப்பின் தலைவர் கலாநிதி குண தாஸ அமரசேகர மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பாரிய சதித்திட்டம் ஒன்று இடம்பெறு கின்றது. புலிகளிடமிருந்து அரச படையின ரால் மீட்டெடுக்கப்பட்ட கிழக்கை மீண்டும் புலிகளிடம் ஒப்படைக்கும் நடவடிக்கையே அச்சதி.

ஐ.தே.கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸும் இச் சதித்திட்டத்தை நிறைவேற்று வதற்காகவே ஒன்றிணைந்து இத்தேர்தலில் போட்டியிடுகின்றன.

இத்தேர்தலில் அந்தக் கட்சிகள் இரண்டும் வெற்றிபெற்றால் தமிழர்களும் முஸ்லிம் களும்தான்கிழக்கை ஆட்சிசெய்வார்கள். கிழக்கு அப்படியே புலிகளிடம் போய்ச் சேர்ந்துவிடும்.

அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் சிங்களவர்கள் கிழக்கில் ஓரங்கட்டப்படுவர்.

இந்த நிலை ஏற்பட்டிருக்க வேண்டு மென்றால் சிங்களவர்கள் ஒன்றிணைந்து புலி களுக்கு ஆதரவான கட்சிகளைத் தோற் கடிக்க வேண்டும். (சி)

# சர்வதேச சமூகத்தின் நிதி உதவி கிடைத்தாலே வடக்கு, கிழக்கிற்கான உணவு உதவி தொடரும்

## உலக உணவுத் திட்டம் அறிவிப்பு; 1 லட்சத்து 75 ஆயிரம் பேர் பாதிப்பு

கொழும்பு, மே 03

சர்வதேச சமூகத்தின் நிதியுதவி குறித்த புதிய உறுதிமொழி கிடைக்கும் வரை வடக்கு - கிழக்கைச் சேர்ந்த ஒருலட்சத்து 75 ஆயிரம் பேருக்கான உணவு விநியோகம் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டிருக்குமென உலக உணவுத்திட்டம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் உணவு விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு கார ணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எதிர்கொள் வதற்குத் தம்மைத் தயார்ப்படுத்தி வருகி றோம் என மனிதாபிமான அமைப்புகள் தெரிவித்துள்ளன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேருக்கு பலனளிப்பதாக அமைந்திருந்த உணவுத் திட்டத்தைப் போதிய வளங்கள் இன்மை யால் இடைநிறுத்தியுள்ளதாக உலக உண வுத் திட்டத்தின் இலங்கைக்கான இயக்குநர் முகமட் சலஹீன் ஐக்கிய நாடுகளின் ஐ.ஆர். ஐ.என். செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

அரசுடன் பேச்சு நடத்தி எமது முன்னு ரிமை எது என்பது குறித்த இணக்கப்பாட் டுக்கு வந்தோம் எனக் குறிப்பிட்டுள்ள உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான இயக் குநர், தம்மிடமுள்ள வளங்களின் மட்டுப் படுத்தப்பட்ட அளவு காரணமாக தம்மால் அனைத்தையும் பொறுப்பேற்க முடியாதுள் ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் புதிய உறுதி மொழி கள் கிடைக்கும்வரை வடக்கு - கிழக்கிற் கான உணவுத்திட்டம் இடைநிறுத்தப்பட்டி ருக்குமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக உணவுத் திட்டத்தின் இலங் கைப் பிரிவு கடும் நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றது. கடந்த வருடம் அதன் நிதியுதவி 40 வீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

இதேவேளை, இலங்கையின் உணவு விலைகள் 50 வீதத்தினால் அதிகரித்துள்ளன.

இலங்கையில் உணவுப் பொருள்களின் முன்னைய விலைகளை அடிப்படையாக வைத்து மதிப்பிட்டவேளை எமக்கு மேலதி கமாக 3 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர்கள் தேவைப்பட்டன எனக் குறிப் பிட்டுள்ள உலக உணவுத்திட்ட இயக்குநர், தற்போது உணவுப் பொருள்களின் விலைகள் பெருமளவுக்கு அதிகரித்துள்ளதையும் சுட் டிக்காட்டியுள்ளார்.

உள்ளூர் அரிசி விநியோகத்தில் ஏற் பட்ட 12.5 வீத வீழ்ச்சியும் உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்புக்கு கார ணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, உணவுப்பொருள்களின் விலை அதிகரிப்புக் காரணமாக வறிய மக் கள் போஷாக்கின்மை நெருக்கடியை எதிர் கொள்ள நேரும். மருத்துவம், கல்விபோன்ற வற்றின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடி யாத நிலைக்கு அவர்கள் தள்ளப்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வறிய சமூகங்கள் அன்றாடம் கிடைக் கும் உணவையே நம்பி வாழ்கின்றன. விலை அதிகரிப்பால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள மனிதாபிமான அமைப்புகள் தம்மால் நீண்ட கால் அடிப்படையில் திட்டமிட முடியா துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளன.

இதன் காரணமாக சிறுவர்களின் கல்வி மற்றும் சுகாதாரம் புறக்கணிக்கப்படலாம் எனக் 'கிறிஸ்டியன் சில்ரன் பண்ட்' எனும் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சைகள் இலவசமாக வழங் கப்படும் மருத்துவ நிலையங்களுக்குச் செல்வதற்குத் தேவையான பேருந்துக் கட்ட ணத்தைச் செலுத்துவதற்கான வசதியோ அல்லது மருந்துகளை வெளியே வாங்குவ தற்கான பணமோ அவர்களிடம் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இவர்கள் சாதாரண நோய்களுக் கான அறிகுறிகளை அலட்சியம் செய்கின் றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(சி)

## ஜசீகரனின் விடுதலைக்கு மன்னிப்புச்சபை பிரசாரம்

கொழும்பு, மே 03

பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'அவுட்ரீஜ்' இணையதள உரிமையாளரும் பத்திரிகை யாளருமான வடிவேல் ஜசீகரன் மீது ஏற்றுக் கொள்ளத்தக்க குற்றம் எதுவும் இல்லாத பட் சத்தில் - நீதிமன்றமொன்று தடுப்புக் காவ லில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பிக் காத பட்சத்தில் - அவரை உடனடியாக விடு தலை செய்ய வேண்டும். - இவ்வாறு கோரும் பிரசார நடவடிக்கையை சர்வதேச மன் னிப்புச் சபை ஆரம்பித்துள்ளது.

இதனடிப்படையில் பல்வேறு வேண்டு கோள்களை விடுத்து இலங்கை ஜனாதிபதி, பிரதம நீதியரசர், பொலிஸ் மா அதிபர் உட் பட முக்கியஸ்தர்களுக்கு சர்வதேச மன்னிப் புச்சபை கடிதங்களை அனுப்பவுள்ளது.

மனித உரிமை அமைப்புகளையும் பொது மக்களையும் இதில் இணையுமாறும் சர் வதேச மன்னிப்புச்சபை கோரியுள்ளது.

ஜசீகரனின் மனைவியான வளர்மதிக்கு உரிய மருத்துவ சிகிச்சை வழங்கப்படவில்லை என்பது குறித்து சர்வதேச மன்னிப்புச்சபை கவலை வெளியிட்டுள்ளதுடன் இருவரை யும் துன்புறுத்த வேண்டாமெனவும் அதிகாரி களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (சி)

## தமிழ் யுவதிகள் மூன்றுபேர் கைதாகி வெலிக்கடைச் சிறையில்

கொழும்பு, மே 03

வத்தளையில் அமைந்துள்ள தொழிற் சாலையொன்றில் கடமையாற்றும் நானுஓய சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த இரு யுவ திகள் உட்பட மூவர் வெலிக்கடைச் சிறைச் சாலையில் கடந்த ஞாயிற்றுகிழமை முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரி விக்கப்படுகின்றது.

இவர்கள் மூவரும் கடந்த ஞாயிற்றுக் கிழமை வத்தளையில் வைத்துப் பொலிஸா ரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர் களிடம் அடையாள அட்டை இருந்தபோதி லும் பொலிஸ் பதிவு இல்லை என்ற கார ணத்தை முன்வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர். பின்னர் இவர்கள் வத்தளை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு வெலிக் கடைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதில் இருவர் நானுஓய சமர்செட் தோட்டத்தைச்சேர்ந்த கந்தசாமி திலகவதி (வயது - 34), மற்றும் கருப்பையா கமலா தேவி (வயது - 32), என இனங்காணப் பட்டுள்ளனர். மற்றையவர் கொழும்பைச் சேர்ந்தவர் எனக் கூறப்படுகிறது.

இக்கைது குறித்து நானுஓயப் பொலிஸா ருக்கு வத்தளைப் பொலிஸார் எவ்வித அறி வித்தல்களையும் தெரியப்படுத்தவில்லை யென விசனம் தெரிவித்துள்ள உறவினர் கள் வெலிக்கடை பொலிஸாரிடம் தொடர்பு கொண்டு கேட்டதற்கு மேற்படி மூவரை யும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்பே விடுதலை செய்யமுடியும் எனத் தெரிவித் தனர். (சி)

## கொழும்பில் 6 ஆம் திகதி மௌனப் பேரணி

# வடக்கு கிழக்கு நிலைமையை அறிய ஏனைய பகுதி மக்களுக்கு உரிமை மறுப்பு

## சர்வதேச பத்திரிகைகள் சம்மேளனம் அறிக்கை

கொழும்பு, மே 03

வடக்கு - கிழக்கு மக்களுக்கு எதிராக எவ்வாறான யுத்தம் முன்னெடுக்கப்படு கின்றது என்பதனை அறிவதற்கு இலங்கை மக்களுக்கு உள்ள உரிமை கடந்த ஒரு வருட காலப் பகுதியில் அதிகளவுக்கு மறுக்கப்பட்டுள்ளது என சர்வதேச பத்திரி கையாளர் சம்மேளம் தெரிவித்துள்ளது.

தென்னாசியாவின் 2007, 2008 காலப் பகுதிக்கான ஊடக சுதந்திர அறிக்கையை, சர்வதேச ஊடக சுதந்திர தினமான மே 2 ஆம் திகதியை முன்னிட்டு சர்வதேச பத்திரி கையாளர் சம்மேளனம் வெளியிட்டுள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை,இலங்கையில் பத்திரிகை யாளர்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத் துங்கள் என்ற பிரசாரத்தின் ஒரு பகுதியாக எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பில் மௌனப் பேரணியொன்று நடைபெறவுள்ளது என் றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் ஆரம்பமாகும் இந்த மௌனப் பேரணி ஜனாதிபதி மாளிகை வரை செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சர்வதேச பத்திரிகையா ளர் சம்மேளனம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில்கடந்த 12மாதங்களாக அரசுக் கும், ஊடகங்கள் உட்படப் பொது அமைப் புகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்ச் சியாகப் பாதிப்படைந்து வருகின்றன.

2008ஆம் ஆண்டு அரசு யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிய பின்னர் மோதல் தீவிரமடைந்துள்ளது. இலங்கை முழுவதும் ஜனநாயக நடைமுறைகள் தொடர்ந்தும் அழிக்கப்பட்டுவருதல், வன்முறை, மனித உரிமைமீறல் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் நீதி யின் பிடியிலிருந்து விதிவிலக்கு அளிக் கப்படுதல் போன்றவற்றிற்கு உகந்த சூழலை ஏற்பட்டுள்ளது.

ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்கு தல்கள், துன்புறுத்தல்கள் போன்றவை நாளாந்த நிகழ்வாக மாறியுள்ளன.

ஊடகப் பணியாளர்கள் மீதான தாக்கு தல் குறித்த முறைப்பாடுகளை சட்ட அமு லாக்க அமைப்புகள் அலட்சியப்படுத்தல் காரணமாக ஊடகவியலாளர்கள் மீதான தாக்கு தல்களை மேற்கொள்வோர் தப்பிச் செல்ல முடிகின்றது.

கடந்த ஒருவருட காலப் பகுதியில் பத் திரிகையாளர்களின் கொலைகள் குறித்த விசாரணைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதற்கப்பால் பல ஊடகவி யலாளர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைக்கப் பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ மோதல்கள் நடைபெறும் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு ஊடக வியலாளர்கள் செல்வது மிகவும் கடுமை யாகத் தடுக்கப்பட்டுள்ளது. மேலும், அர சின் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையமே மோதல் தொடர்பான உத்தி யோகபூர்வத் தகவலை வழங்கும் ஏகபோக உரிமையைப் பெற்றுள்ளது.

இவ்வாறான கட்டுப்பாடுகள் காரண மாக மோதல் குறித்த சரியான தகவல்களை வழங்க முடியாத நிலையில் ஊடகங்கள் உள்ளதுடன், வடக்கு-கிழக்கு மக்களுக்கு எதிராக எவ்வாறான யுத்தம் முன்னெடுக் கப்படுகின்றது என்பதை அறிவதற்கான இலங்கை மக்களின் உரிமை பறிக்கப்படு கின்றது எனவும் கூறப்படுகிறது - தெரிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானம், நல்லூர்

## பாலசம்ரட்ஷணா வழங்கும் முருக பக்திப் பாடல்கள்

## ஒலி,ஒளி இறுவெட்டு வெளியீட்டு விழா

இடம் :திவ்விய ஜீவன சங்க மண்டபம்
காலம் :நாளை (04.05.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி
தலைவர் : திரு.பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் (யாழ்.பல்கலைக்கழகம்)
பிரதம விருந்தினர்: திரு.க.கணேஷ் (யாழ்.மாவட்ட அரச அதிபர்)
ஆசியுரை: குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்)

### விசேட உயர் பிரதிநிதிகள்

- வாழ்நாள் பேராசிரியர் திரு.பொன்.பாலசுந்தரம்பிள்ளை (யாழ்.பல்கலைக்கழகம்)
- திருமதி பாலசுந்தரம்பிள்ளை
- வாழ்நாள் பேராசிரியர் திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயா (யாழ்.பல்கலைக்கழகம் )
- திரு.ஆ.சிவசுவாமி (மேலதிக அரசாங்க அதிபர், யாழ.மாவட்டம்)
- திரு.மு.செ.சரவணபவ (மாநகரசபை ஆணையாளர்)
- திரு.ஆறு.திருமுருகன (செயலாளா- சிவபூமி, யாழ்.பல்கலைக்கழக ஆலோசகர்)
- திரு.C.V.K.சிவஞானம (முன்னாள் மாநாகரசபை ஆணையாளர்)

### சிறப்பு விருந்தினர்கள்

- திரு.க.கேசவன (சட்டத்தரணி)
- திரு.பா.செந்தில்நந்தனன (பிரதேச செயலர், நல்லூர்)
- திரு.சி.ஏ.மோகன்றாஸ (பிரதேச செயலர், கோப்பாய்)
- திரு.மு.நந்தகோபாலன (பிரதேச செயலர், வேலணை)
- திரு.க.சிவனேசன (டாக்டர், யாழ்.போதனா வைத்தியசாலை)
- திரு.J.யோன்சன் ராஜ்குமார் (பிரதி இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)
- திரு.பிரம்மஸ்ரீ இரா சந்திரசேகர சர்மா (சாந்திகம்)
- திரு.K.சிறிஸ்கந்தராஜா (பொறியியலாளர் C.E.C.B)
- திருமதி K.ஸ்ரீஸ்கந்தராஜா (வைத்தியகலாநிதி)

### கௌரவ விருந்தினர்கள்

- ந.சத்தியபாலன (ஆசிரியர்)
- திருமதி எஸ்.இராமச்சந்திரா (கல்வியற்கல்லூரி விரிவுரையாளர்)
- திரு.M.V.V.சேயோன (J/113', கிராம அலுவலர்)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- கடவுள் வணக்கம் (வரவேற்பு நடனம்)
- வரவேற்புரை : செல்வன் பிரம்மஸ்ரீ பா உதயகாந்த சர்மா
- தலைமை உரை : பேராசிரியர் இரா சிவச்சந்திரன்
- ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள (நல்லை ஆதீனம்)
- பிரதம விருந்தினர் உரை: திரு.கணேஷ
- விசேட பிரதிநிதிகள் உரைகள்
- வெளியீட்டுரை : சிவஸ்ரீ கு.குமாரக்குருக்கள
- வெளியீடு : முதற்பிரதி வழங்கல் திரு.மாசிலமணி மங்களேஸ்வரன்
- நயப்புரை : பேராசிரியர் திரு.எஸ்.சிவலிங்கராஜா (தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- ஏற்புரை : G.அற்புதன (இசையமைப்பாளர்)
- கலைஞர்கள் கௌரவிப்பு
- தொகுப்பாளர் : திரு.இ.சந்திரகுமா (கிராம உத்தியோகத்தர், நல்லூர்)
- சிறப்புப் பிரதிகள் வழங்கல்:
- நடன நிகழ்வு : நிருத்தியாஞ்சலி செல்வி ந.சோபனா (ஆசிரியர், உடுவில்) சச்சிதானந்த சிறுவர் சங்கத்தினூடாக நிருத்திய நிகேதன் நாட்டியாலயம்.
- நன்றியுரை : செல்வி பா.தாட்சாயணி (ஆசிரியர்)

### பின்னணிக் கலைஞர்கள்

**பாடியவர்கள்:**
- திரு.T.றொபேட
- திருமதி A.சுகன்யா
- திரு.R.குகானந்தன
- திருமதி R.வாசஸ்பதி
- செல்வி R.தாரணி
- செல்வி K.காயத்திரி

**வாத்தியகாரர்கள்:**
- திருமதி P.ரஜீவன (நாதஸ்வரம்)
- திருமதி P.ரவீந்திரன (தவில்)
- திருமதி A.ஜெயராமன (வயலின்)
- திருமதி S.சதா வேல்மாறன (மிருதங்கம்)
- திரு.S.விமல்சங்கா (முகர்சிங்) தபேலா
- திரு.S.சசிக்குமா (புல்லாங்குழல்)
- திரு.M.தனபால (பொங்கஸ்)

பாடலாக்கம்: சம்பாதீஸ்வரர் ந.வீரமணி ஐயர் • ஒலிப்பதிவு: திரு.கே.சத்தியன் • விசேட படப்பிடிப்பு: திரு.ஏ.யசீர்
இசையமைப்பு: திரு.ஜி.அற்புதன் • ஒளிப்பதிவு: சண்விடியோ சென்ரர் • படத்தொகுப்பு : செல்வன் கு.வேல்முருகன்
வர்ணனை: பா.தாரணி • தயாரிப்பு உதவியாளர்: ப.உதயகாந்த சர்மா, சௌ.மதனகுமாரசர்மா
தயாரிப்பு: சிவஸ்ரீ சௌ.சசிகுமாரக் குருக்கள் (லண்டன்). (சி.552641)

**பாலகதிர்காம தேவஸ்தானம், பாலசம்ரட்ஷணா முத்தமிழ் சங்கம்,நல்லூர்.**

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்



தோற்றம்: 21.06.1938

மறைவு: 03.04.2008

## அமரர் கிட்டுணு சின்னத்துரை

(ஐயா மாமா)

மின்னாமல் முழங்காமல் சொல்லாமல் சென்றுவிட்டீர்கள்
அன்பு மொழி பேசியெம்மை அரவணைத்தீர்கள்
அவனியிலே நின் பிரிவால் ஆறுதலை நாமிழந்தோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 03.04.2008 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கிட்டுணு சின்னத்துரை அவர்களின் மரணச்செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (03.05.2008) சனிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பகுத்தறிவகம் லேன்,
அம்மன் வீதி, திருநெல்வேலி. (73695)

குடும்பத்தினர்.

---

### கோழிக் குஞ்சுகள் விநியோகம்

சாவகச்சேரி கால்நடை மருத்துவர் பணிமனையில் நல்ல இன பேட்டுக் கோழிக் குஞ்சுகள் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அச்சுவேலி கோழிப்பண்ணையிலிருந்து தென்மராட்சி பிரதேச கோழிப் பண்ணையாளர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் கோழிக் குஞ்சுகள் பகிர்ந்தளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கோழிக் குஞ்சுகள் தேவைப்படுவோர் முற்பணம் செலுத்தி பதிவு செய்யுமாறு கால்நடை மருத்துவர் எஸ். இரகுநாதன் அறிவித்துள்ளார். (203-207)

### புத்தகக் கண்காட்சி

வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் உலக புத்தக தினத்தை முன்னிட்டு கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமையன்று மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயத்தில் புத்தக கண்காட்சி ஒன்றை நடத்தியது.

இக்கண்காட்சியை அங்கு இடம்பெயர்ந்து இயங்கி வரும்மாதகல்நுணசை வித்தியாலய மாணவர்கள் மற்றும் மாதகல் புனித தோமையார்வித்தியாலயமாணவர்கள் ஆகியோரும் பார்வையிட்டு பயனடைந்தனர். (203-135)

---

**இதோ!**

சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்.

**சித்தாரா பனங்கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/54169)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10.06.1951

மறைவு: 17.05.2004



அமரர்

## சின்னப்பிள்ளை சிவலிங்கம்

ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறவில்லை நம் துயரம்
என்றென்றும் உந்தன் நினைவுடன்
ஏங்கித் தவிக்கின்றோமே அப்பா.

'லிங்கஸ்தான்',
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி. (சி/54169)

நீங்காத நினைவுடன்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உயரிய ஊடகப் பணியை போற்றும் தினம் இன்று

இன்று சர்வதேச ஊடக தினம்-

ஒரு தேசத்தின் 'காவல் நாய்' என்றும் 'நான்காவது காவல் அரண்' என்றும் மதிக்கப்படுவது ஊடகத்துறை.

சட்டவாக்கல் துறை (நாடாளுமன்றம்), நீதித்துறை (நீதிமன்றங்கள்), நிறைவேற்று அதிகாரத்துறை (இலங்கையைப் பொறுத்தவரை ஜனாதிபதி) ஆகிய முத்துறைகளுக்கு அடுத்து நல்லாட்சிக்கான நான்காவது காவலரண் ஊடகத்துறைதான்.

சமுதாயச் சீரமைவுக்காக உயரிய பணியை உன்னதமாக ஆற்றும் ஊடகவியலாளர்களை உவந்து உயர்த்திப் பாராட்டும் சர்வதேச நாளாக இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

உலகிலேயே ஊடகப் பணியாளர்களுக்கு மிக மோசமான - மிகப் பயங்கரமான - இடமாக அடையாளம் காணப்பட்டிருப்பது இலங்கை.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து கள நிலைவரங்களை நேரடியாகக் கண்டறிந்த சர்வதேசப் பத்திரிகையாளர்கள் அமைப்பின் பிரதிநிதிகள் குழு, தமது விஜயத்தின் முடிவில் வெளியிட்ட அவதானிப்பு அறிக்கையிலேயே ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கு உலகிலேயே மிகப் பயங்கரமான பிரதேசம் இலங்கை என்று - குறிப்பாக யாழ்ப்பாணம் என்று - சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதுவும், தமிழ் ஊடகவியலாளர்களின் நிலையோ இங்கு சொல்லுந்தரமன்று.

அத்தகைய ஊடகவியலாளர்களின் உன்னத பணியைப் போற்றுகின்ற இந்நாளில், அச்சமூகச் சிற்பிகள் அன்றாடம் எதிர்கொள்ளும் ஆபத்தை - அவலத்தை - ஒரு தடவை சிந்தித்துப் பார்த்து மனங்கொள்வதும் பொருத்தமானது.

உலகத்துக்கு உண்மையை எடுத்துரைப்பதன் காரணமாக உயிராபத்தை எதிர்கொள்ளும் பேரச்ச நிலைக்குள் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளன் ஆழ்த்தப்பட்டிருக்கின்றான்.

ஊடகவியலாளருக்கு எதிரான அடக்குமுறை - அச்சுறுத்தல் நடவடிக்கை - இலங்கையில் இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது.

நீதியான தனது பணியை ஆற்றிய குற்றத்துக்காக ஊடகவியலாளர்கள் கொல்லப்படுகின்றார்கள்; தாக்கிக் காயப்படுத்தப்படுகின்றார்கள்; அச்சுறுத்தி அடக்கப்படுகின்றார்கள்; அவர்களது குரல்வளை நசுக்கப்படுகின்றது.

இந்த வரிசையில் அண்மையில் படுகொலை செய்யப்பட்டு, குரல்வளை நசுக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்களின் எண்ணிக்கை நீண்டு செல்கின்றது.

மயில்வாகனம் நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரத்தினம் சிவராம் (தராகி), சுகிர்தராஜன் (எஸ்.எஸ்.ஆர்.) என இப்பட்டியல் தொடர்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் அரசு ஆட்சிப்பீடமேறி, தமிழ் மக்களுக்கு எதிரான கொடூர யுத்தம் கட்டவிழ்த்து விடப்பட்ட இக்கால கட்டத்தில் உங்களின் 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகள் மட்டும் எட்டு ஊழியர்களை இழந்திருக்கின்றன. பல மூத்த ஊடகவியலாளர்களின் பணிகள் அச்சுறுத்தல் காரணமாக முடக்கப்பட்டிருக்கின்றன. பலர் தமது உயிர்ப்பாதுகாப்புக்காக 'உதயன்' அலுவலகத்துக்குள்ளேயே தம்மை சிறை வைத்துக் கொண்டு பணியாற்றும் இக்கட்டு. ஊடகவியலாளர்கள் தொடங்கி பத்திரிகைகளை விநியோக மையங்களுக்கு எடுத்துச் செல்லும் விநியோகப் பணியாளர்கள் வரையான ஊடக ஊழியர்களின் உயிர்கள் எக்கணமும் பறிக்கப்படலாம் என்ற அச்சம் நீடிக்கின்றது.

'உதயன்' அலுவலகத்துக்குள் முகமூடியணிந்து துப்பாக்கிதாரிகள் சிலர் புகுந்து கண்மூடித்தனமாகச் சுட்டு, இரு ஊழியர்களின் உயிரை அந்த இடத்திலேயே பறித்து, இருவரைப் படுகாயப்படுத்தி, கணினிகள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை நாசப்படுத்தி, வெறியாட்டம் புரிந்த கொடூரத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு நேற்றாகும்.

அதன் பின்னர் உதயனின் களஞ்சியசாலை பல மில்லியன் ரூபா பெறுமதியான காகிதாதிகள் உள்ளிட்ட மூலப் பொருட்களோடு தீயிட்டு எரிக்கப்பட்டது.

கொழும்பில் 'சுடர் ஒளி' அலுவலகம் மீது இரண்டு தடவைகள் கிரனேட் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பாதுகாப்பு ஊழியர் கொல்லப்பட்டார். வாகனங்கள் பல சேதமடைந்தன.

இந்த அட்டூழியங்கள் நடத்தப்பட்ட நாள்களில் கூட 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகள் நிற்காமல் வெளிவந்தன. அதன் ஊழியர்கள் இத்தகைய வெறியாட்டங்களை எதிர்கொண்டு அந்தக் கணத்தில் தடுமாறினாலும் தமது பணியை - உறுதியை - கடமையை - தவறவிடாது அடுத்த கணம் சுதாகரித்துக் கொண்டு பொறுப்பைத் தொடர்கின்றார்கள்.

இலங்கையில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய அநேகமான ஊடகங்கள் இவ்வாறு தமது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்துகொண்டு, உறுதியுடன் செயற்படுவதால்தான் இன்று ஓரளவுக்கேனும் உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்த முடிகின்றது.

இவ்வாறு பணியில் உறுதியாகவுள்ள ஊடகவியலாளர்களுக்கு சமூகம் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவிக்கும் நாளாகவும் இந்த சர்வதேச ஊடகவியலாளர்களுக்கான தினம் அமைகின்றது.

இலங்கையில் அண்மைக்காலத்தில் தீவிரமடைந்துவரும் ஊடக அடக்குமுறை தொடர்பில் நாம் இரண்டு விடயங்களை அவதானிக்க முடிந்தது.

ஒன்று - எண்பதுகளின் கடைசியில் இலங்கையில் நிலவிய ஊடக அடக்கு முறையின் கொடூரப் போக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவில் தீவிரத்துடன் மறுபிறப்பெடுத்திருக்கின்றது என்பது.

அடுத்தது - ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிராகப் புரியப்படும் வன்முறைகளின் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதேயில்லை என்பது.

சிவராம் படுகொலை தொடர்பாக கண்துடைப்புக்கு ஒருவரும், 'ரூபவாஹினி'க்குள் அமைச்சர் மேர்வின் குழுவினர் நடத்திய கலாட்டா தொடர்பாக பாதாள உலகக் குழுவின் குண்டர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர் என்பதைத் தவிர பெரிதாகச் சட்ட நடவடிக்கை ஏதும் ஊடக அடக்குமுறைக்கு எதிராக இங்கு முன்னெடுக்கப்படவேயில்லை.

பிற மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஏதும் எடுக்காமல், குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கும் விசேட கலாசாரம் ஒன்று அரச உயர்மட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படுவது போன்று, ஊடக அடக்குமுறையில் ஈடுபடும் தரப்புகளுக்கும் அத்தகைய சிறப்புரிமைகளை அதிகாரத்தின் இரும்புக் கரங்கள் இங்கு வழங்கியிருக்கின்றமை வெளிப்படை.

உலகில் அதிகம் ஊடகப் பணியாளர்கள் கொல்லபட்ட வரிசையில் முதல் மூன்று இடங்களுக்குள் சிறிய நாடான இலங்கைக்கு இடம் உள்ளது.

இங்கு ஊடகப் பணியாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள், அச்சுறுத்தல்கள் போன்றவற்றுக்கு எதிராக சர்வதேச ரீதியில் ஊடக அடக்கு முறைக்கு எதிராகக் குரல் எழுப்பும் அமைப்புகள் எல்லாம் ஒன்று திரண்டுள்ள புதிய சூழல் ஒன்று தற்போது உருவாகிவருகின்றது.

இலங்கையில் மிக மோசமான ஊடக அடக்குமுறையை எதிர்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கு ஆதரவாக சர்வதேச ரீதியில் எழுந்துள்ள இந்த அழுத்தம் இங்கு ஊடகவியலாளர்களுக்கு உற்சாகம் தரவல்லது; ஊக்கம் கொடுப்பது; மனம் தளராது பணியாற்ற மருந்தாக அமைவது.

ஊடக அடக்கு முறைக்கு ஆதரவு காட்டி, அதில் ஈடுபட்டிருக்கும் அதிகாரத் தரப்புகளுக்கு எதிராக மேலும் உறுதியான நடவடிக்கைகளை சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் மேற்கொள்வதற்கு உறுதி கொள்ளும் நாளாக இன்றைய சர்வதேச ஊடக உரிமைத் தினம் அமையட்டும்.







சென்.ஜோன்ஸ் கல்லூரியின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் மாணவர்களின் கோலாட்டத்துடன் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும் கண்காட்சி மண்டபத்தை வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

மாணவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதை மூன்றாவது படத்தில் காணலாம். (111)

# தமிழகத்துக்குள் ஊடுருவி முக்கிய தலைவர்களைக் கடத்திவிட்டு விடுதலைப் புலிகள் மீது பழியைப் போட கருணாகுழு திட்டமாம்

## இந்திய மத்திய உளவுப் பிரிவுப் பொலிஸார் எச்சரிக்கை

சென்னை,மே3

தமிழகத்துக்குள் ஊடுருவி அங்குள்ள முக்கிய தலைவர்களைக் கடத்திச் சென்று மிரட்டிவிட்டு அந்தப் பழியை விடுதலைப்புலிகள் மீது போடுவதற்குக் கருணா குழுவினர் திட்டமிட்டுள்ளதாக இந்திய மத்திய உளவுப் பிரிவுப் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதனால் தமிழகம் முழுவதும் பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தமிழகத்திலிருந்து வெளியாகும் 'தினத்தந்தி' நாளிதழ் தெரிவித்துள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகின்றது. விடுதலைப்புலிகள் இராணுவ முகாம்கள் மீதுதாக்குதல் நடத்தி வருகின்றார்கள். இந்தப் போரில் தினமும் பலர் மடிகின்றார்கள்.

இலங்கையில் பெரிய அளவில் போர் நடைபெறும்போது தமிழகத்துக்கு இலங்கையிலிருந்து அகதிகள் வருவது வழக்கம். அகதிகள் அதிகளவில் வரும்போது அவர்களோடு சேர்ந்து விடுதலைப்புலிகளும் ஊடுருவ வாய்ப்புண்டு. இதனால் தற்போது தமிழகக் கடலோர மாவட்டங்களில் பொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டுள்ளனர். கடலில் கடலோரப் பாதுகாப்புப் படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்துக்குள் வரும் இலங்கை அகதிகள் பலத்த சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்நிலையில்இந்திய மத்திய உளவுப் பிரிவுப் பொலிஸார் ஓர் அதிர்ச்சியான தகவலைத் தமிழகப் பொலிஸாருக்கு அனுப்பி வைத்துள்ளனர். அந்தத் தகவலில்,

இலங்கையிலிருந்து கருணா குழுவினர் தமிழகத்துக்குள் ஊடுருவி ஊடுருவ வாய்ப்பிருப்பதாகவும், அவ்வாறு ஊடுருவும் கருணா குழுவினர் தமிழகத்தில் வசிக்கும் முக்கிய தலைவர்களைக் கடத்திச் சென்று மிரட்டுவதற்கு வாய்ப்புள்ளது என்றும் விடுதலைப் புலிகள் மீது இந்தப் பழியைப் போட்டு, அவர்களுக்கு கெட்ட பெயரை உண்டாக்கி, போரில் அவர்களது கவனத்தைத் திசை திருப்ப இந்தச் சதிச் செயலை அரங்கேற்றலாம் என்றும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையையடுத்து சென்னை உட்பட தமிகம் முழுவதும் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக இரவுநேர ரோந்துப் பணியில் பொலிஸார் விழிப்போடிருக்க வேண்டும், வாகனச் சோதனை தீவிரமாக இருக்கவேண்டும், லொட்ஜ்களில் சோதனை அதிகரிக்கப்பட வேண்டும் போன்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் உற்பத்தி செய்யப்பட்ட 7 ஆயிரம் நாற்றுகள் மானிய அடிப்படையில் விநியோகம்

சங்கானை,மே3

யாழ்.மாவட்ட திட்டமிடல் செயலகத்தின் நிதியுதவியுடன்வடமாகாண தென்னைப் பயிர்ச்செய்கை சபையால் உற்பத்தி செய்யப்பட்ட 7 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் மானிய அடிப்படையில் வழங்கப்படவுள்ளன என்று சபையின் பிராந்திய முகாமையாளர் க.தேவேந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள், மீளக் குடியமர்ந்தோர் ஆகியோருக்கு நாற்று ஒன்று 130 ரூபா வீதம் ஒருவருக்கு ஐந்து நாற்றுகள் வழங்கப்பட வுள்ளன.

எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் இந்த விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அரச அதிபர் கே.கணேஷ், உரும்பிராய் - கோப்பாய் வீதியில் தென்னைநாற்று உற்பத்தி செய்யப்பட்ட காணியில் வைத்து சம்பிரதாயபூர்வமாக நாற்று விநியோகத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஒரு பிரதேச செயலர் பிரிவிற்கு 450 நாற்றுக்கள் கிடைக்கக்கூடியதாக இந்த விநியோகம்நடை பெறவுள்ளது.

சங்கானை தென்னை வளர்ப்போர் சங்கம், நாவலர் வீதியில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய அலுவலகம், நல்லூர் கமநல நிலையத்தில் அமைந்துள்ள தென்னை அபிவிருத்தி அலுவலர் அலுலகம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்வதன் மூலம் நாற்றுகளைப் பெற்றுக்கொள்ள முடியும். (203-29)

# சிறுவர் சங்கமம்

யாழ்ப்பாணம்,மே3

குடும்ப புனர்வாழ்வு நிலையமும் சாந்திகமும் இணைந்து சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை மைதானத்தில் சிறுவர் சங்கம நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார். (203)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை 22 | 04.05.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: சதுர்த்தசி | மு.இ. 08.40வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| | பி.இ. 04.48வரை |
| சுபநேரம் : | 08.56 - 10.26 |
| ராகுகாலம் : | 04.26 - 05.56 |

# நாட்டுக்கும் மக்களுக்கும் அழிவைத் தரும் யுத்தம் உடன் நிறுத்தப்படவேண்டும்

## புதிய ஜனநாயகக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே3

நாட்டுக்கும் மக்களுக்கும் அழிவைத் தரும் யுத்தம் உடன்நிறுத்தப்பட வேண்டும் என்று இலங்கை புதிய ஜனநாயகக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்னும் பொருளில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை புதிய ஜனநாயகக் கட்சியின் புரட்சிகர மேதினக் கூட்டம் புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் வட பிரதேச செயலாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பொ.முருகேசு, கா. பஞ்சலிங்கம், தேசிய கலை இலக்கியப் பேரவையைச் சேர்ந்த க.தணிகாசலம், தொழிற்சங்கவாதியான க.தவராசா உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

மேதினக் கூட்டத்தில் பின்வரும் 5 அம் ச க் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

* நாட்டுக்கும் மக்களுக்கும் அழிவைத் தரும் யுத்தம் உடன் நிறுத்தப்படவேண்டும்.
* இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும்.
* மக்களின் அன்றாட வாழ்வைப் பாதிக்கும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவேண்டும்.
* தொழிலாளிகள் விவசாயிகளின் உரிமைகளும் நலன்களும் பாதுக்காக்கப்படவேண்டும்.
* விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தைவாய்ப்பு உறுதிப்படுத்தவேண்டும். (203-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கி அனுசரணையுடன்

இன்று பாராட்டிக் கௌரவிக்கப்படும்

எமது சிரேஷ்ட O/L - 2007 மாணவர்களை

# நாமும் வாழ்த்துகின்றோம்

THE EXPRESS INSTITUTE KOPAY — A BOON TO STUDENTS

BOC 14+PLUS



செல்வன் செ.மதுரங்கன் | செல்வன் ப.சுஜீவன் | செல்வி அ.பகீரதி | செல்வன் ந.சதீஸ்வரன் | செல்வி ம.சிந்துஜா | செல்வன் பா.பிரவீன்

செல்வி கி.டயர்னி | செல்வி அ.சுமங்கலா | செல்வி கி.ஆர்த்திகா | செல்வி சி.குகப்பிரியா | செல்வி இ.சிந்துஜா | செல்வி வி. பிரவீனா

செல்வன் இ.கௌதமன் | செல்வன் ந.நிஷாந்தன் | செல்வி இ.ஆதித்தியா | செல்வி ஜெ.லோஜிக்கா

O/L-2007 பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற

மாணவர் கௌரவிப்பு விழா

இடம் :
இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் பிரதான மண்டபம்

காலம்:
03.05.2008 சனிக்கிழமை காலை 9.00 மணி

தலைவர்:
திரு.ந. மோகநேசன், B.A.
நிறுவன சிரேஷ்ட ஆசிரியர்

பிரதம விருந்தினர்
வைத்தியகலாநிதி சி. சிவகோணேசன்
யாழ்.போதனா வைத்தியசாலை
வைத்தியகலாநிதி தாரணி சிவகோணேசன்
யாழ்.போதனா வைத்தியசாலை, நிறுவன பழைய மாணவி

1973 - 2008

விழா அனுசரணை BOC 14+PLUS

அதிபர், ஆசிரியர், ஆளணியினர், மாணவர்கள்.
The Express Institute

மாணவ உலகிற்கு ஓர் மகத்தான வரப்பிரசாதம்!!
The Express Institute
Irupalai, Kopay.

O/L 2008, தரம் 10, தரம் 09 மாணவர்கள்

ஊடக அனுசரணை: உதயன்



## முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி

பொலிகண்டி, கொத்தணி முன்பள்ளி மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு பொலிகண்டி முன்பள்ளி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பொலிகண்டி, கொத்தணி முன்பள்ளியின் தலைவர் த.இராசசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்வார். (203-70)

## வீட்டுகிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 31 . 08 . 1931



மறைவு 04 . 04 . 2008

### அமரர் இளையதம்பி காசிப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர்)

எங்கள் அன்புத் தெய்வம் இளையதம்பி காசிப்பிள்ளை அவர்களின் மறைவின் பின்னர் உள்ளூர், வெளிநாடுகளிலிருந்து தந்தி, தபால், தொலைபேசி மூலமாக துயரங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இல்லங்கள் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், வீட்டுக்கிருத்தியம் நாளை (04.05.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'சிவமகம்',
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

குடும்பத்தினர்

(சி/552659)


### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர். (73741)


### தவறிவிட்டது

வட்டு-வடக்கு, கலைநகர், சித்தன்கேணியைச் சேர்ந்த தங்கராசா சிவனருட்செல்வன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (821743230V), இராணுவ அடையாள அட்டை என்பன அடங்கிய போர்ஸ் பண்ணாகம் மெய்கண்டான் ம.வி. இற்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கலைநகர், நேருஜி சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/552664)

### தவறிவிட்டது

சிவசச்சிதானந்தமூர்த்தி ரேவதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (896732803V), மானிப்பாய் மகளிர் கல்லூரி பாடசாலை அடையாள அட்டை என்பன யாழ். நகரிற்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: சிவசச்சிதானந்தமூர்த்தி,
135, ஆனைக்கோட்டை வீதி, அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (குணபால கடையடி).
தொ.பே.: 0212225353, 0212222558. (73751)

### தவறிவிட்டது

மகாலிங்கம் உதயகுமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல.(711821775V) விசேட அடையாள அட்டை இல. (0907008003) என்பன சுன்னாகத்தில் இருந்து சங்கானை ஊடாக மானிப்பாய் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும்

கண்ணாதசன் பான்சி,
சந்தை தெற்கு வீதி, சுன்னாகம்.
தொ.பே.: 060 221 9443, 060 221 6192 (சி/552669)


### நாய்க்குட்டி விற்பனைக்கு

ஜேர்மன் செப்போர்ட் இன $1\frac{1}{2}$ மாத சடைக்குட்டிகள் விற்பனைக்குண்டு. இந்த நாய்க்குட்டிகளை வாங்க விரும்புபவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு வருகை தந்து நாய்க்குட்டிகளை பார்வையிட்டு விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

ஜோமான் அன்ரனி
(இதயன், முன்னாள் கிராம சேவையாளர், நந்நகர்),
தொ.பே.: 0776011186, இல.417/10, கஸ்தூரி வீதி, நந்நகர், யாழ்ப்பாணம் (சி/552665)

### விற்பனைக்கு

நல்லின கறணம், சைனா புறாக்கள், அல்ஷேசன் ஆண் நாய், லவ்பேட்ஸ் கூடு என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 93, கோயில் வீதி (கைலாசபிள்ளையார் கோயில் அருகில்),
நல்லூர், யாழ்ப்பாணம்.

... மாலை 4 மணிக்குப் பின் ... காலை 11 மணிக்கு முன் மாலை ... (73714)


## விசேட தேவையுள்ளோரை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே3

நடமாடச் சிரமம்படும் விசேட தேவைக்குரியவர்களை உரிய முறையில் பரிசோதித்து வைத்திய சிகிச்சைகளை வழங்க ஜெய்ப்பூர் நிறுவனம் முன்வந்துள்ளது.

திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் இதற்கான பதிவுகள் சுண்டிக்குளிச் சந்தியில் உள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

எனவே விசேட தேவைக்குரியவர்களின் குடும்ப அங்கத்தவர்களை வருகைதந்து இதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட சமூகசேவை அலுவலர் தெரிவித்துள்ளார். (203)

## மரண அறிவித்தல்

### Dr. மயில்வாகனம் சிற்றம்பலம் (R.M.P.)



கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பெரியரசடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிற்றம்பலம் (01.05.2008) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுப்பையா- பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் விசாலாட்சியின் அன்புக் கணவரும் கலாதேவி (ஜேர்மனி), நிர்மலா (ஆசிரியை, அல்லாரை அ.த.வி.), சுசீலா (கனடா), தேவகி (ஜேர்மனி), அமரர் வாசுகி, மோகனதாஸ் (கொழும்பு), கண்ணதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாம்பசிவம் (ஜேர்மனி), குணசீலன் (ஆசிரியர், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்), அருள்நேஸ் (கனடா), விநாயகமூர்த்தி (ஜேர்மனி), தேவிகா (கொழும்பு), ஆன் (லண்டன்) ஆகியோரின் மாமனும் கஸ்தூரி, சிபிராஜ், துஷாந்தி, அஜந்தினி, சுரேக்கா, மெல்லா, யதன், நிரூபா, நிமல், கஜேந்திரன், முகுந்தன், றேச்சல், ஹென்றி, ஜேம்ஸ் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, இராசம்மா, முருகேசு ஆகியோரின் சகோதரரும் முருகேசு (பிரான்ஸ்), தங்கமுத்து (கனடா), நடராஜன் (ஆசிரியர்) காலஞ்சென்றவர்களான காமாட்சி, செல்லப்பிள்ளை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.05.2008) சனிக்கிழமை பி.ப.1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பெரியரசடி வீதி,
சாவகச்சேரி. (73743)

தகவல்:
சி.விசாலாட்சி
(மனைவி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் தாதி பயிற்சி நெறிக்கு இவ்வாண்டு 200 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், மே 3

யாழ். தாதியர் பயிற்சிக்கல்லூரிக்கு இவ்வாண்டு மாணவர் தாதி பயிற்சிக்கு 200 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 2007 ஆம் ஆண்டு வெளியான வர்த்தமானி அறிவித்தலின்படி மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்து நேர்முகத்தேர்வில்200 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் யாழ். சுகாதார சேவைகள் பணிமனை, சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகள், யாழ். தாதிய பயிற்சிக்கல்லூரி ஆகியவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை காலை 9 மணிக்கு தாதியர் பயிற்சிக்கல்லூரியில் வைத்து வைபவ ரீதியாக வழங்கப்படும் என்றும்- பயிற்சி நெறிகள் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் -அவர் மேலும் கூறினார்.

**தெரிவானவர்களில் 10 பேரின் விவரம்**

ஏ.பிரேமிண் - வட்டுக்கோட்டை, எஸ்.சிந்துயா - கொழும்புத்துறை, ரி.சுலோஜினி - கொக்குவில் மேற்கு, பி.பிரதீபன் - ஏழாலை, எஸ்.சிறியாகணேஷா - புலோலி தெற்கு, எஸ்.சுதர்ஷன் - அராலி தெற்கு, வி.கதிர்ச்செல்வன் - மிருசுவில், எம்.நிஷாந்த் மரியதாஸ் - கார்மல் வீதி, யாழ்ப்பாணம், டி.அல்பிரட் - சுதுமலை வடக்கு, கே.அருட்பிரகாசம் - சித்தன்கேணி.

ஏ.மகேஸ்வரன் - மீசாலை கிழக்கு, பி.அம்பலவாணர் - வட்டு.தென்மேற்கு, பி.அமிர்தலிங்கம் - செம்மணி வீதி, நல்லூர்., எஸ்.அருணியா - பயவிக்கூடல் காரைநகர், எஸ்.அருளானந்தம் - கொக்குவில் கிழக்கு, எஸ்.அமிர்தலிங்கம் - சண்டிலிப்பாய் மேற்கு, ரி.அரியராஜ் - புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம், வி.அன்னலிங்கம் - துன்னாலை வடக்கு, ஏ.பாஸ்கரஜோதி - பொலிகண்டி, ஏ.பாலசிங்கம் - மட்டுவில் கிழக்கு.

எஸ்.பாலசுப்பிரமணியம் - பருத்தித்துறை, ரி.பாலசுப்பிரமணியம் - சுழிபுரம், ஈ.சந்திரபாலன் - தெல்லிப்பழை, என்.இராசமயில் - கச்சேரி நல்லூர் வீதி, பி.இளங்கோவன் - கரணவாய் கிழக்கு, என்.ஞானமுத்து - கைதடி மேற்கு, ஏ.ஞானசந்திரன் - ஊரெழு வடக்கு, ஈ.இந்திரன் - சுன்னாகம் கிழக்கு, டி.ஜேசுதாசன் - புன்கன்குளம் வீதி, எம்.ஜோகநாதன் - தும்பளை.

பி.ஜெயராசா - வரணி, ஜே.கந்தசாமி - சாவகச்சேரி, கே.கிருஷ்ணசாமி - காரைநகர், கே.குணம் - இமையாணன் கிழக்கு, எம். கனத்கிருஷ்டி - குடத்தனை வடக்கு, எம்.கந் தசாமி - அச்சுவேலி தெற்கு, பி.கந்தசாமி - சண்டிலிப்பாய், எஸ்.காசிப்பிள்ளை - அல்லாரை வடக்கு, எஸ்.கதிரவேலு - இழவாலை, எஸ். கணபதிப்பிள்ளை - கரம்பன் வடக்கு.

எஸ்.கணேஷராசா - துன்னாலை மத்தி, எஸ்.கணேசலிங்கம் - நாவற்குழி தெற்கு, எஸ்.கருணாநிதி - பொலிகண்டி தெற்கு, எஸ்.கிருஷ்ணசாமி - சரசாலை வடக்கு, ரி.கணபதிப்பிள்ளை - சுன்னாகம், பி.கெங்கநாதன் - துன்னாலை வடக்கு, ஜி.குமாரசாமி - தும்பளை, கே.கிருஷ்ணபிள்ளை - உரும்பிராய் வடக்கு, ஜே.குமாரசாமி - சுது மலை வடக்கு, கே.கதிர்காமநாதன் - பொலிகண்டி.

எஸ்.கணபதிப்பிள்ளை - மந்துவில் கிழக்கு, வி.விநாயகமூர்த்தி - மட்டுவில் வடக்கு, கே.லிங்கராஜா - பருத்தித்துறை, என்.லோகநாதன் - நவாலி கிழக்கு, பி.மகாலிங்கம் - மட்டுவில் வடக்கு, ஜ.மகாலிங்கம் - குப்பிளான் வடக்கு, கே.மகேஸ்வரன் - கரவெட்டி மத்தி, எல்.மகேந்திரநாதன் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு, எம்.மகேஸ்வரன் - பண்ணாகம், எம்.மன்மதராஜா - மானிப்பாய் மேற்கு.

ஆர்.மன்மதராஜா - வட்டு.தென்மேற்கு, எஸ்.மகாலிங்கம் - கரணவாய் மேற்கு, எஸ்.மகேந்திரன் - நவாலி கிழக்கு, வி.மகாராசா - கட்டுடை மேற்கு, ஜி.முத்துலிங்கம் - பண்டத்தரிப்பு, எம்.கே.மனோகரன் - உரும்பிராய் கிழக்கு, ஏ.நடேசபிள்ளை - புலோலி மத்தி, ஜே.நாகராஜா - சங்கானை கிழக்கு, என்.நடராசா - காரைநகர், என்.சிவாஜனை - ஊரெழு கிழக்கு.

எஸ்.நடராஜா - திருச்செந்தூர், என்.செல்வநாயகம் - யாழ்ப்பாணம், பி.பொன்னையா - உடுப்பிட்டி, டி.பொன்னுத்துரை - ஆவரங்கால் கிழக்கு, ஜி.பஞ்சவர்ணன் - தம்பசிட்டி, கே.பரநிருபசிங்கம் - யாழ்ப்பாணம், பி.பஞ்சவர்ணன் - காரைநகர், பி.பத்மநாதன் - கொடிகாமம், பி.ரதீஸ்வரி - நீர்வேலி, எஸ்.பொன்னம்பலம் - புத்தூர் மேற்கு.

ரி.பத்மநாதன் - வட்டுக்கோட்டை, ஈ.எஸ்.பீற்றர் சிங்கம் - யாழ்ப்பாணம், பி.ரத்தினவேல் - இமையாணன் மேற்கு, ஜே.ராஜரட்ணம் - உடுவில், ஜே.ராசநாயகம் - சங்கானை, கே.ராஜேந்திரம் - மானிப்பாய், ஆர்.ராஜரட்ணம் - மட்டுவில் தெற்கு, ஆர்.ரட்ணகுமார் - வவுனியா, என்.ராசேந்திரம் - கோண்டாவில், எஸ்.ராஜரட்ணம் - கோப்பாய்.

ரி.ராஜரட்ணம் - உரும்பிராய், ஜே.ரங்கநாதன் - புலோலி கிழக்கு, பி.அனற் ராமு - யாழ்ப்பாணம், ஏ.சற்குருநாதன் - பொலிகண்டி மேற்கு, ஏ.செல்வராசா - ஊரெழு மேற்கு, ஏ.சிவராஜா - உரும்பிராய் வடக்கு, ஏ.சுந்தரலிங்கம் - சுதுமலை வடக்கு, ஏ.சற்குணராஜா - அளவெட்டி மத்தி, ஏ.சோமசுந்தரம் - மீசாலை கிழக்கு, பி.சற்குணராஜா - சரசாலை தெற்கு. (வளரும்)

## வலிமேற்குச் சந்தைகளில் மரக்கறி விலை உயர்வு

வலி.தென் மேற்கு, மே 3

வலி.தென் மேற்கு பிரதேசத்தில் மரக்கறிகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன.

பண்டத்தரிப்பு சந்தை, மானிப்பாய் பொதுச் சந்தை ஆகியவற்றில் கடந்த வருடத்தில் இதே காலப் பகுதியில் மரக்கறிகள் விற்கப்பட்ட விலையிலும் பார்க்க தற்போது 4 மடங்கு- 5மடங்கு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

கரட், கோவா, கத்தரிக்காய், பாவற்காய், பூசனிக்காய், வெண்டிக்காய் என்பன அதிக உச்ச விலையில் விற்கப்பட்டுவருவதை காணக்கூடியதாக உள்ளது.

இதேவேளை வெங்காயத்தின் விலையும் அதிகரித்து உள்ளது.

இதனால் பாவனையாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர்.

(1-135)



அச்சுவேலியில் ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேதின நிகழ்வில் கட்சியின் பிரமுகர் ஒருவர் உரையாற்றுவதையும் அங்கு சமுகம் கொடுத்திருந்த பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

## 'எக்ஸ்பிறஸ்' கல்வி நிறுவனத்தில் மாணவர் கௌரவிப்பு இன்று

யாழ்ப்பாணம்,மே 3

இருபாலை 'எக்ஸ்பிறஸ்' கல்வி நிறுவனத்தில் கற்று கடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இலங்கை வங்கியின் அனுசரணையுடனும் உதயனின் ஊடகஅனுசரணையுடனும் நடைபெறவுள்ளது.

இக்கௌரவிப்புநிகழ்வுஇன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்வி நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிறுவன சிரேஷ்ட ஆசிரியர் ந.மோகநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை வைத் தியர் வைத்திய கலாநிதி சி.சிவகோணே சன், நிறுவனத்தின் பழைய மாணவி யான வைத் திய கலாநிதி தாரணி சிவ கோணேசன் தம்பதியினர் கலந்து கொள்வர்.

இலங்கை வங்கியின் வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம், கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் வி.கே. கணபதிப்பிள்ளை, வலி.கிழக்குப் பிரதேசசபையின்செயலாளர் த.நடராசா, 'உதயன்' நிறுவனத்தின் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், நல்லூர் கோட்டக் கல்விப்பணிப் பாளர் கே.வி. குணசீலம்,இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகா மையாளர் என். சிவரட்ணம் ஆகியோர்கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

(50-202)

## உருவப்பட திரைநீக்கமும் பணி நயப்பும்

யாழ்ப்பாணம், மே 3

உரும்பிராய் கருணை இல்ல முன்னாள் தலைவர் அமரர் ஆசிரியர் மணி அ.பஞ்சாட்சரத்தின் உருவப்படத் திரை நீக்கமும் பணி நயப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு கருணை இல்லத்தில் இடம்பெற உள்ளன.

(1)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நீலகண்டர் தெய்வானைப்பிள்ளை

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் பூநகரி, பொன்னாவெளியில் வசித்தவரும் தற்போது 41, முதலியார் வீதி, கச்சேரியடியில் வசித்தவருமாகிய நீலகண்டர் - தெய்வானைப்பிள்ளை 01.05.2008 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற விநாசித்தம்பி - கயிலாயவல்லி தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற விநாசித்தம்பி நீலகண்டரின் அன்பு மனைவியும் , கந்தசாமி, காலஞ்சென்ற கிருஷ்ணதாசன், புவனராணி, ஸ்ரீதரன், வசந்தகுமாரி, பரமேஸ்வரன், கருணாநிதி ஆகியோரின் தாயாரும், அமிர்தவல்லி, காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தெய்வானைப்பிள்ளை, குமாரசாமி, உருத்திராதேவி, குகதாசன், தங்கலட்சுமி, இரஞ்சினிதேவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு அன்னாரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
நீ.கருணாநிதி
*(ஆசிரியர், புனித றோக்ஸ் றோ.க. வித்தி.)*

*41, முதலியார் வீதி,*
*கச்சேரியடி, யாழ்ப்பாணம்.*

### திருமதி சீனிக்குட்டி கனகசபை

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீனிக்குட்டி கனகசபை நேற்று (02.05.2008) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனர் கார்த்திகேசு கனகசபை அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான கமலாம்பிகை, பாலசுப்பிரமணியம் மற்றும் புஸ்பலீலாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சுந்தரகாந்தன் (ஓய்வு பெற்ற உப அதிபர், யா/முத்துத் தம்பி மகா வித்தியாலயம்), தனபால சிங்கம்(ஓய்வு பெற்ற படவரைஞர்- நீர்பாசனத்திணைக் களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர்களான நாகமித்திரன் (ஓய்வுபெற்ற முதலியார்), மயில்வாகனம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) மற்றும் பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற திட்டமிடல் அலுவலர்), சேதுபதி ஆகியோரின் மாமியாரும் சர்வேஸ்வரன்(ப.நோ.கூ.சங்கம்), விக்னேஸ்வரன் (ஆசிரியை), மிருளாளினி சக்திவடிவேல், தேவிகா சிவானந்தராசா, இளங்குமரன் (ஜேர்மனி), சூரியகலா அமரநாதன்(ஆசிரியை, இணைப்பாளர்- திரும றைக்கலாமன்றம், வவுனியா), வாசுகி-மதனமோகன் (கனடா), யாழினி - பாலேந்திரன் (முகாமையாளர், வள்ளுவர் இல்லம், வட்டுக்கோட்டை), Dr.துஷ்யந்தி-சிவானந்தன் (ஆஸ்திரேலியா), மயூரன் (நிகழ்ச்சி திட்ட உதவியாளர்), வைதேகி(திறந்த பல்கலைக்கழகம் - கொழும்பு) லண்ட னைச் சேர்ந்த நிஷந்தா, துஷந்தா, தர்ஷன், நிரோஷன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2008) ஞாயிற்றுக்கிழமை கோவில்வளவு கற்பகப்பிள்ளையார் கோவிலடி, உரும்பிராய் வடக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12மணிக்கு இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
க.சுந்தரகாந்தன்
(மகன்)

கோவில்வளவு கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
உரும்பிராய் வடக்கு.


## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் க.சூரியகுமார்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி இராசம்மா கந்தையா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.

சாவகச்சேரி நகரசபை
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சுகாதார வைத்திய அதிகாரி
பணிமனையில் - சாவகச்சேரியில் பொதுச்
சுகாதார பரிசோதகராக (நகரசபை-1)
கடமையாற்றும் க.கர்ணன்
அவர்களது அன்புத் தாயார்
திருமதி திலகவதி கனகசபாபதி (உசன்

அவர்கள் 01.05.2008 அன்று கொழும்பில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
சாவகச்சேரி.

## வீடு விற்பனைக்கு

*இல.9, பிரப்பங்குளம் வீதி, வண்ணார் பண்ணையில் அமைந்துள்ள அண்ணளவாக 1 1/4 பரப்புக் காணியுடன் வீடும் 10'' 12'' 'சைபினர்' சீவல் பட்டறையும் விற் பனைக்கு உண்டு.*

*தொடர்புக்கு: தொ.பே: 077 9181035*
வெ.இருதயராஜன்
*இல.145, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*
*(பஸ்ரியன் சந்திக்கு அருகில்)*


## திருத்தி வாசிக்கவும்

உதயனின் நேற்றைய பதிப்பில் 2ஆம்பக்கத்தில் வெளியான திருமதி கந்தையா சிதம்பரம் என்பவரின் மரணஅறிவித்தலில் மகனின் பெயர் ஓரிடத்தில் [illegible] அதனை ஜெகநாதன் எனத் திருத்தி வாசிக்கவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை நிறுத்தவும், பேச்சை ஆரம்பிக்கவும் இலங்கை அரசை இந்தியா வலியுறுத்த வேண்டும்

## மேதினக் கூட்டத்தில் வைகோ கோரிக்கை

சென்னை, மே 03

இலங்கையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவதற்கும், தற்போது நடைபெற்றுவரும் யுத்தத்தை நிறுத்துவதற்கும் - பேச்சைத் தொடர்வதற்கும் இலங்கை அரசை இந்தியா வலியுறுத்தவேண்டும்.

- இவ்வாறு தமிழ் நாட்டின் மூத்த அரசியல் தலைவரும், ஈழத்தமிழ் ஆதரவாளரும், ம.தி.மு.க. பொதுச் செயலாளருமான வைகோ தெரிவித்துள்ளார்.

ஆஹயில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணியின் மேதின மாநாட்டில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு வைகோ மேலும் பேசியவை வருமாறு:-

கடந்த முறை விடுதலைப் புலிகளே தாங்களாக முன்வந்து போர்நிறுத்தம் செய்தனர். பின்னர் போர் நிறுத்தத்தை நீடித்தனர். இந்நிலையில் போர்நிறுத்தத்தை இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டது.

போர்நிறுத்தம் அமுலில் இருந்த நிலையில், இலங்கை அரசு போர் நிறுத்தத்தை தன்னிச்சையாக மீறி, மீண்டும் போரைத் தொடங்கியது. இதனால் பல்லாயிரம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கம் மூலம் உணவு, மருந்து உள்ளிட்ட பொருள்களைக் கொண்டு செல்லக் கூட இலங்கை அரசு அனுமதிப்பதில்லை. இலங்கை விவகாரம் குறித்து இந்திய உள்துறை மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் தவறான தகவல்களைத் தெரிவிக்கின்றனர்.

### கிழக்குத் தேர்தலை ரத்துச் செய்ய வற்புறுத்த வேண்டும்

இதன்மூலம், இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை திசை திருப்புகின்றனர். இலங்கையில் நடக்கும் உண்மை நிலையை அறிந்து போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும். இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் தேர்தலை ரத்துச் செய்யவும் வற்புறுத்தவேண்டும்.

### இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா தடுத்து நிறுத்தியது!

ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்குள் நுழைய சிங்கள அரசு அனுமதிக்கவில்லை. மேலும், ஐ.நாவின் கிளையை கொழும்பில் நிறுவுவதற்கு அனுமதி தரவில்லை. இதன் மூலம் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் அப்பட்டமாக மீறப்படுகின்றன என்பது நிரூபணமாகின்றது.

இதற்கிடையே, விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்த சில நாடுகள், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடக்கின்றன என ஐ.நாவில் கொண்டு வந்த பிரேரணையை இந்தியா தடுத்து நிறுத்தியது என இங்கிலாந்துத் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் இந்த அணுகுமுறை மிகவும் வருந்தத்தக்கது - என்றார் வைகோ.

இந்த மேதினக் கூட்டத்தில் மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி பொதுச்செயலாளர் சு.துரைசாமி, ம.தி.மு.க. துணைப் பொதுச்செயலர் மல்லை சத்யா, கொள்கை பரப்புச் செயலர் நாஞ்சில் சம்பத் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். (அ-சி)

## பிள்ளையான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வருகின்றனர்.

அரச ஊடகங்கள் அரசுக்கு சார்பாகத் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்கின்றன என்று ஐ.தே.கட்சியால் குற்றம் சாட்டப்படுவதை எம்மால் ஏற்க முடியாது.

அரச ஊடகங்கள் அனைவரது செய்திகளையும் சமமாக வெளியிடுகின்றன. பக்கசார்பான நடவடிக்கைகள் எவையும் இதில் கிடையாது. - என்றார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறுகையில், பிள்ளையான் குழுவிடம் ஆயுதங்களுமில்லை, விறகுக் கட்டையுமில்லை.

தபால் வாக்கெடுப்பின் போது அது நன்றாகத் தெரிந்தது. இரண்டுநாள் தபால் வாக்கெடுப்பு எந்தவிதமான வன்முறையுமின்றி அமைதியாக இடம்பெற்றது.

எல்லாத் தேர்தல்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்தத் தேர்தல் மிகவும் அமைதியாகவும் நியாயமாகவும் இடம் பெறுகிறது. - என்றார். (அ-சி)

## சமரச முயற்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் நேற்றுமுன்தினம் நடத்திய பேச்சில் புதிய கட்சி அமைப்பதற்குஇணக்கம்காணப்பட்டது.

விமல் வீரவன்ஸ உள்ளிட்ட ஜே.வி.பியில் இருந்து பிரிந்தவர்களும் எதிர்காலத்தில் ஜே.வி.பியில் இருந்து விலகத் தயாராகிக்கொண்டிருப்போரும் ஒன்றிணைந்து புதிய அரசியல் முன்னணி ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர் என நந்தன குணதிலக்க நேற்றுத் தெரிவித்தார்.

இந்தப் புதிய அரசியல் முன்னணிக்குள் நாட்டிலுள்ள அனைத்து சக்திகளையும் இணைத்துக்கொள்ளவுள்ளதாகவும் அதனூடாக மேலாதிக்க மற்றும் பிரிவினை வாதத்திற்கு எதிராகப் பாரிய தேசிய செயற்றிட்டமொன்றைக் கட்டியெழுப்பப் போவதாகவும் அவர் கூறினார்.

''இம்மாத்திற்குள் புதிய முன்னணி தொடர்பாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. தற்பொழுது தேர்தலுக்காக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் புதிய கட்சியொன்றைப் பதிவு செய்ய முடியாது.

''எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல்கள் ஆணையாளரைச் சந்தித்து எமது புதிய கட்சியைப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்'' எனவும் அவர் தெரிவித்தார். (அ-சி)


BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
பிரிவு 2 O/L DAY CLASS
(எமது SUPER GRADE ஆசிரிய குழு)
ஆரம்பம்:- 05.05.2008 திங்கள் 8.00 AM
A/L 2010 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.


## நான்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

20 பேரைக் கொண்ட இந்தக் குழு நாளை இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் செயலாளர்களுடன் அண்மையில் தேர்தல் ஆணையாளர் நடத்திய விசேட பேச்சுகளைத் தொடர்ந்தே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது எனவும் கூறப்படுகின்றது.

கண்காணிப்புக் குழு மூன்று குழுக்களாகப் பிரிந்து தேர்தல்களுக்கு முன்னரும் தேர்தல் தினத்தன்றும் மற்றும் தேர்தலுக்குப் பின்னரான செயற்பாடுகள் குறித்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கைக்குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

9.30 மணியளவில் இனந்தெரியாதோர் கைக்குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தை அடுத்து அங்கிருந்த இராணுவத்தினரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் பிள்ளையான் குழு உறுப்பினர்களும்வனத்தைநோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சுமார் ஒருமணி நேரம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தினால் அப்பிரதேசத்தில் பதற்றம் நிலவியது எனவும் கூறப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான சேத விவரங்கள் நேற்று மாலை வரை தெரியவரவில்லை. (சி)

## தெஹிவளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளைப்புத் தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் 13 பேர் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வியாழக்கிழமை காலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரை இத் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

தெஹிவளைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மூவர் கைது செய்யப் பட்டனர். இவர்கள் கிளிநொச்சி, பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்தவர்கள் என்றும் தமது அடையாளத்தை உறுதிப்படுத்ததவறியமையினால்இவர்கள் கைது செய்யப்பட்டனர்என்றும்பொலிஸார்தெரிவித்தனர்.

இதேவேளை, மொரட்டுவப் பல்கலைக் கழகத்தை அண்டிய பகுதிகளில், தேடுதலின்போது சந்தேகத்தின் பேரில் 10 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தமது ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்திய சமயமே கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலைய தடுப்புகாவலில் வைத்து நேற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (சி)


SHAMROCK
EACHCHAMODDAI RD, JA.
A/L 2009 - தமிழ் புதிய பிரிவு !!
ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்
ஆரம்பம் 03.05.2008
Sat, Sun 12 -1
A/L 2010 - சங்ககாலம்
Sat, Sun 1-2
திரு.S.சிவா B.A (Hons)
A/L CHEMISTRY
★ PHYSICAL
★ PAPER CLASS
Mr.K.செல்வா, B.Sc
(மீண்டும் யாழ் நகரில்).


## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேகமுமில்லை. இதேவேளை குறுகிய அரசியல் இலாபத்திற்காக இலங்கையில் தேர்தல்கள் பல தடவை பயன்படுத்தப்பட்டமையும் வெளிப்படையான விடயம்.

டெடிகம இடைத்தேர்தல், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல், வடமேற்கு மாகாணசபைத் தேர்தல் போன்றன இதற்கான சில உதாரணங்களாகும். இந்தத் தேர்தல்கள் காரணமாக இலங்கையின் ஜனநாயகமும் அபிவிருத்தியும் பாரிய இழப்புகளைச் சந்தித்தன.

இலங்கையின் இருபிரதான கட்சிகளும், அவற்றுடன் இணைந்து செயற்படுகின்ற ஏனைய கட்சிகளும் இதற்கான பொறுப்பிலிருந்து தப்பமுடியாது.

### மக்கள் அச்சமற்ற சூழ்நிலையில் வாக்களித்தாலே ஜனநாயகம்

இவற்றின் காரணமாக வெறுமனே தேர்தல்களை நடத்துவது மாத்திரம், மக்களின் உயரிய ஜனநாயக உரிமையை உறுதி செய்வதாக அமைந்துவிடாது என நாம் கருத வேண்டிய சூழ்நிலையை இலங்கையின் அரசியல் கலாசாரம் ஏற்படுத்தியுள்ளது.

வாக்காளர்கள் அச்சமற்ற சூழ்நிலையில் தமது உயிர்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லாத நிலையில் வாக்களிக்கும்போதே ஜனநாயகம் அர்த்தபூர்வமானதாக அமைகின்றது.

### சர்ச்சைக்குரிய தேர்தல்

இதனடிப்படையில் பார்க்கும்போது கிழக்கு மாகாணசபைத் தேர்தல் இலங்கையின் ஜனநாயக வரலாற்றில் மிகுந்த சர்ச்சைக்குரிய ஒன்றாகவும் - முக்கியமானதாகவும் இருக்கின்றது.

வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வன்முறையற்ற உகந்த சூழல் உறுதிப்படுத்தப்படுவது மிகவும் முக்கியமானதாகும்.

தேர்தல் சுதந்திரமான, நீதியான விதத்தில் இடம்பெறாவிட்டால் அது இனப்பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தும். நாங்கள் எதிர்கொள்ளும் நெருக்கடியின் குழப்பம் மிகுந்த தன்மையை இது தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

மேலும் ஜனநாயக மரபு ரீதியிலான ஆட்சி முறை மீதான மக்களின் நம்பிக்கையை இது குறைத்துவிடும். இதற்கப்பால் தேர்தல் முடிவுகள் கிழக்கு மற்றும் தெற்கு அரச கட்டமைப்புகளின் இறைமைக்கு கடும் சவாலாக அமையும்.

இதன் காரணமாக எந்தக் கட்சி வெற்றி பெறுகிறது என்பதற்கப்பால் கிழக்கு மக்கள் தமது பெறுமதியான வாக்கை அளிப்பதற்கான சுதந்திரமான, நீதியான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கடப்பாடுள்ளது -என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.(அ)


CHEMISTRY
A/L :- 20[illegible]
ORGANIC
(Sat, Sun)
Batch - I 6.15 - 7.0 A.M
Batch - II 5.15 - 6.0 P.M
S.Vasu
NAVALAR, JAFFNA.


## இலத்திரனியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் அதன் வேட்பாளர்களது பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் ஹசன் அலியினால் இது தொடர்பாக கட்சிக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த முறைப்பாடே தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## மன்னார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் மேற்கொண்ட முறியடிப்புத் தாக்குதலில் இராணுவத்தினருக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், அவர்கள் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பினர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இதேவேளை, மன்னார் பரப்பங்கண்டலுக்கு வடமேற்குத் திசையில் உள்ள கறுக்காய்க்குளம் பகுதியின் சுமார் 1.5 கிலோ மீற்றர் நிலப்பரப்பை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் தம்வசம் கொண்டுவந்தனர் என்று நேற்றுப் படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இச்சமரில் தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் பலர் படுகாயமடைந்தனர் என்றும் விடுதலைப் புலிகளில் குறைந்தது 15 பேர் வரை உயிரிழந்திருக்கலாம் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் மணலாறு முன்னரங்க நிலைகளில் உள்ள ஆட்லறித் தளங்களிலிருந்து ஜானகபுர, கிரிபென்வெவ மற்றும் சிறிபுர பகுதியிலுள்ள இராணுவத் தளங்கள் மீது கடந்த புதன் கிழமை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆட்லறித் தாக்குதலில் 25 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவத்தினர் அநுராதபுர வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)


UNIT
Jaffna Nelliady

| | |
|---|---|
| **Mother Boards** | |
| Intel Original 945GCNL | 8950/- |
| Asus P5GC-MX1333Mhz | 7500/- |
| Foxconn intel 945 | 6900/- |
| **Processors** | |
| Intel Dual Core 1.6Ghz Box | 4900/- |
| Intel Dual Core 1.8Ghz Box | 8300/- |
| **Rams** | |
| Kingston DDR1 256-2500/- 512- | 3750/- |
| Kingston DDR2 1Gb-2500/- 512- | 1750/- |
| **Hard Disks & Optical Drives** | |
| 40Gb IDE | 4800/- |
| 80Gb Sata | 5600/- |
| 80Gb IDE | 5800/- |
| 160Gb Sata | 6600/- |
| 250Gb Sata | 8600/- |
| Combo | 3700/- |
| DVD-RW | 4500/- |
| External Enclosure USB | 4750/- |
| Hard disk Cooling Fan 1000/-, | 5000/- |
| **Monitors** | |
| 15" Samsung / Viewsonic CRT | 11900/- |
| 17" Samsung / Intex Flat CRT | 14500/- |
| 17" Viewsonic LCD Wide | 24900/- |
| 19" Samsung LCD Wide | 31000/- |
| External & Internal TvTuner | 3900/- |
| 128Mb AGPVGA | 4750/- |
| **Power & Casings** | |
| ATX LGA Casings with SMPS | 3750/- |
| SMPS - ATX LGA 500W | 2500/- |
| **Toners:** | |
| HP 12A, 13A, 15A, 35A, 49A, 53A&92A | |
| Canon EP22, 25 & 26, 303, 308 | |
| **Others** | |
| Keyboard Normal 500 MultiMedia 900 | |
| Mouse Optical 500/-, 600/-, 900/-, 1500/- | |
| Speaker 650/-, 1250/- & 2500/- | |
| Woofers Creative / MicroLab 4250/- | |

Brand New Laptops From 59000/-
New Intel Pentium From 39000/-
Special Reduction for Dealers, Assemblers, Schools, Go's & NGO's
We Are Not Big But The Best
Available Stock Only
மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna, ✆ 4590720,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] வீதியில் 361ஆம் லக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org